சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்

(1934-ல் பதிவு செய்யப்பெற்றது)

திருநெல்வேலி

★

வெள்ளி விழா

1960

வரலாறு: 1934 - 1959

XVI E.20

ஒற்றுமை சீலம் தொண்டு

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்

(1934-ல் பதிவு செய்யப்பெற்றது)

திருநெல்வேலி

★

வெள்ளி விழா

1960

வரலாறு: 1934 - 1959

அணிந்துரை

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் 1934-ம் ஆண்டில் துவக்கப்பெற்று இன்று இருபத்தாறுவது ஆண்டு நடைபெறுகின்றது.

திருநெல்வேலி மாவட்ட நீதிபதியாக நான் பணியாற்றிய 1945-ம் ஆண்டு முதல் இச்சங்கத்தின் செம்மையான தமிழ்த் தொண்டில் ஆர்வம் மிகுந்து இதனுடன் தொடர்பு கொண்டுள்ளேன். எனது நண்பர் தமிழ்ப் பெரும்புலவர், டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் இச்சங்கத்தைத் தோற்றுவித்ததுமன்றி அதன் பல பணிகளுக்கும் உயிர்நாடியாக அன்று முதல் இன்றுவரை உழைத்து அதன் உருவாகவே விளங்கி வருகிறார்கள்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்" என்பது அவர்களுக்கே தகும்.

ஒரு சங்கத்தின் வாழ்வில் இருபத்தைந்து ஆண்டுகள் இளமையே எனலாகும். இப்பருவத்திற்குள் இச்சங்கம் பல அரிய தொண்டுகளைப் புரிந்துள்ளது. உயர்பள்ளிகளுக்குரிய எல்லாப் பாடங்களுக்கும் கலைச் சொற்களையும், கல்லூரிகட்கு அறிவியற் கலைச் சொற்களையும், ஆட்சிச் சொற்களையும், ஆசிரியர் கல்லூரிக் கலைச்சொற்களையும் இச்சங்கம் தமிழில் ஆக்கி வழங்கியிருத்தலை இவ்வரலாற்று நூல் மிகத் தெளிவாக விளக்குகிறது.

தமிழானது தமிழ்நாட்டில் ஆட்சிமொழியாக நிலைபெறுதற்கு இச்சங்கம் புரிந்துள்ள தொண்டினை அளவில் நிறுத்திக் கூறல் அரிதாம். இதன் அரிய உழைப்பால் விளைந்த ஆட்சிச்சொல் அகராதி முதலியவற்றை அடிகோலியே நமது சென்னை மாகாணத்தில் குடியாட்சி இன்று தமிழ் மொழியில் உருவாக்கப் பெறுகிறது.

இச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் சிறந்தோங்கி வாழ்க.

மா. அனந்தநாராயணன், I. C. S.,
உயர்நீதிமன்ற நீதிபதி,
சென்னை, 20—1—1960.

முன்னுரை

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்து இப்போது இருபத்தாருவது ஆண்டு தொடங்குகிறது. இதுவரை சங்கம் செய்துள்ள பல அரிய செயல்களைப் பற்றிய குறிப்பே இந்த வரலாறு. இவ்விருபத்தைந்து ஆண்டாகச் சங்கத்துக்குப் பெருந்துணை புரிந்து வருகிற பெரியார் அனைவருக்கும் சங்கத்தின் நன்றியும் வாழ்த்தும் உரியன.

திருவாசகம், திருக்குறள், நாலடியார் ஆகிய பழந்தமிழ் நூல்களுக்குச் சொல்லடைவு பொருளடைவுடன் தெளிவான பொருளும் எழுதிப் பலருக்கும் பெருந்துணையாகுமாறு வெளியிடுவதற்கு ஓர் குழுவினை அமைத்துச் செயலாற்றி வருகிறது நம் சங்கம். செந்தமிழ் இலக்கண நூல் தொல்காப்பியத்தினுக்கும் சொல்லடைவு, பொருளடைவுடன் தெளிபொருளும் எழுதி வெளியிடப்பெறும்.

தமிழ் மக்கள் அனைவரும் ஒரு குலத்தினர்; அவர்கள் யாவரும் ஒன்றுபட்டு வாழ்வதுவே பெருவாழ்வாகும். அதனல் தமிழ் மணம் உலகனைத்திலும் பரந்து மிக்க நல்லெண்ணம் நிலவும். இந் நிலைகாண அனைவரும் ஒன்றுபட்டு நம் சங்கத்தின் உறுப்பினராகித் தமிழ் நலம் பேணி இன்புறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,
அமைச்சர்.

சங்கத் தொழிற் கழக உறுப்பினர்

1. தலைவர்—சு. இராமசாமிக் கோனர், பி.ஏ., பி.எல்.
2. துணைத் தலைவர்—டாக்டர் தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை, L.C.P.S., L.M.S.S.A., M.R.A.S.
3. அமைச்சர்—டாக்டர் இ.மு. சுப்பிரமணிய பிள்ளை.
4. துணை அமைச்சர்—இராம. கனகசபாபதிப் பிள்ளை.
5. பொருளாளர்-ப.தி. சுப்பையாப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

உறுப்பினர்

6. ஆ. அருளப்பன், பி. ஏ.
7. பு. சி. புன்னைவனநாத முதலியார்.
8. சு. சுடலைமுத்துப் பிள்ளை.
9. சு. வேங்கடேசுவரன், I.C.S.
10. நீதிபதி மா. அனந்தநாராயணன், I.C.S.
11. சொக்க. அமுத கணேச முதலியார், பி. ஏ.
12. மு. சோமசுந்தரம் பிள்ளை.
13. டாக்டர் இரா. பி. சேதுப் பிள்ளை.
14. அ. ஆ. சுப்ரமணிய பிள்ளை.
15. இ. அ. சிதம்பரம் பிள்ளை, எம். ஏ.

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
1.	தோற்றுவாய் ...	5
2.	சென்னை மாகாணத் தமிழர் முதலாவது மாநாடு	6
3.	சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பெற்றது ...	6
4.	உயர்நிலைப்பள்ளிக் கலைச் சொல்லாக்கம் ...	7
	நெல்லையில் சொல்லாக்கக் கழகம்	
	அறிவுநூற் புலவர் மாநாடு	
	கலைச்சொற்கள்	
	சென்னைமாகாணத் தமிழர் இரண்டாவது மாநாடு ...	8
	சென்னையிற் கலைச்சொல்லாக்கம்	
	கலைச்சொல்லாக்க மாநாடு	
	சென்னைமாகாணத் தமிழர் மூன்றாவது மாநாடு	
	கலைச்சொல் அரங்கேற்று மாநாடு ...	9
	கலைச்சொற்கள்	
	தமிழ்நாடு காங்கிரசு மாநாடு	
	கலைச்சொற்களுக்குப் பரிசளிப்பு ...	10
	சென்னைமாணத் தமிழர் ஆறாவது மாநாடு ...	10
5.	மாநாடுகள் ...	10
	ஏழாவது மாநாடு	
	எட்டாவது மாநாடு ...	11
	ஒன்பதாவது மாநாடு	
	பத்தாவது மாநாடு	
	பதினோராவது மாநாடு ...	12
	பன்னிரண்டாவது மாநாடு	
	பதின்மூன்றாவது மாநாடு	
6.	மறுபடியும் உயர்நிலைப்பள்ளிக் கலைச் சொல்லாக்கம் ...	13
	அரசாங்கத்துக்கு எடுத்து மொழிதல்	
	கலைச் சொல்லாக்கம்	
7.	தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கியது ...	13
	பதினான்காவது மாநாடு	
	ஆட்சிமொழி மாநாடு ...	14
	நெல்லையில் ஆட்சிச் சொல்லாக்கம் தொடங்குதல் விழா	
	நெல்லை ஆட்சிச் சொல்லாக்கக் கழகப் பணி...	16
	பாராட்டு விழா	
	மேலும் ஆட்சிச் சொற்கள் ஆராய்ச்சி	
	வெளியீட்டு விழா	
	சென்னையில் ஆட்சிச் சொல்லாக்கம் ...	17
	சென்னை அரசாங்கம்	
	சென்னைக் கழகப் பணி ...	18
	ஒப்படைப்பு விழா	
	தமிழ் ஆட்சி மொழியாகியது ...	19

எண்	பொருள்	பக்கம்
8.	ஆசிரியர் கல்லூரிச் சொல்லாக்கம் ...	19
	தோற்றுவாய்	
	சொற்கள் உருவாயின	
	தற்கால வெளியீட்டு விழா ...	20
	உறுதியாக்கப் பெற்றமை	
	வெளியீட்டு விழா	
	பரிசளிப்பு விழா	
9.	சாரல் மாநாடு ...	21
10.	சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத் தமிழ்க் கல்லூரி ...	22
	அறநிலையக் காப்புக் கழகத்தின் பெருந்துணை...	23
11.	சைவ வைணவ சமைய விரிவுரையாளர் பயிற்சிக் கல்லூரி ...	24
12.	சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றம் ...	24

எண்	பொருள்	பக்கம்
13.	சங்கத்தின் சிறந்த பணிகள் ...	25
14.	சென்னை அரசுத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் ...	26
15.	சங்கத் தலைவர் முதலியோர் ...	26
16.	பட்டம் பெற்றோர் ...	29
17.	சங்க ஆண்டுப் பொதுக்கூட்டங்கள் ...	30
18.	கலைச் சொல்லாக்கக் கழகம், சென்னை 1936 ...	31
19.	ஆட்சிச் சொல்லாக்கக் கழகம், நெல்லை ...	32
20.	ஆட்சிச் சொல்லாக்கக் கழகம், சென்னை ...	33
21.	ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொல்லாக்கக் கழகம் ...	34

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்

வரலாறு (1934-1959)

1. தோற்றுவாய்

"உலக முதன் மொழிகளுக்கெல்லாம் முற்பட்டது தமிழ் மொழி" என்று துணிந்துரைக்கும் மொழி ஆராய்ச்சி அறிஞர் உளர். நம் இந்திய நாட்டின் தென்பகுதியில் தெலுங்கு, கன்னடம், மலையாளம் வழங்கும் நாடுகளிலெல்லாம் தமிழ் மொழியே பேசப் பட்டு வந்தது. எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் உள்ள தெலுங்கு **அச்ச தெலுங்கு** என்றும், கன்னடம் **பழங் கன்னடம்** என்றும் பெயர் வழங்கப் பெறுகின்றன. அச்ச தெலுங்கு, பழங் கன்னடம் இவைகளிலுள்ள இலக்கியங்களை ஆராய்வார் அவை நல்ல தமிழிலே இருப்பதைக் காண்பார்கள். திருவாங்கூரில் சில ஆண்டு களுக்கு முன்வரை அரசாங்கக் கணக்குகளும் தமிழி லேயே வைக்கப்பட்டிருந்தன. தமிழ்மொழியிற் பிற மொழிச் சொற்கள் மிகுதியாகக் கலக்கப்பட்டு அவை களுக்கு ஏற்ப எழுத்து மாற்றமும் செய்யப்பட்டதுதான் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் தோன்றியமைக்குக் காரணம்.

"இலக்கணம் எதற்கு ? பேசுவது போல எழுதினல் என்ன ?" என்று கூறிச் சிலர் மனம்போனவாறெல்லாம் நூல்களை எழுதிக் குவிக்கத் தொடங்கிவிட்டனர். "உல கத்தில் எந்த மொழியாளரும் செய்யத் துணியாத இச் செயலைச் செய்வது தவறு என்பதை எடுத்துக் காட்டி இலக்கண மரபுக்கு மாருகாதவாறு தமிழ்நூல்களை எழுதி வெளியிடும்வகையான நல்லுணர்வினைத் தமிழ் நாட்டிலே தோற்றுவிப்பதற்கு **ஒரு தமிழ்ச் சங்கம்** அமைவது இன்றியமையாதது" என்று தமிழ்ப் பெரியார் பலர் உணரத் தொடக்கினுர்கள்.

நான்குநேரி நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளிக்கூடத் தலைமைத் தமிழாசிரியராகிய **டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை**யவர்கள், திருநெல்வேலி யில் ஒரு தமிழர் மாநாடு கூட்டித் **தமிழ்ச் சங்கம்** ஒன்று நிறுவ வேண்டும் என்ற எண்ணத்துடன் **25–11–1933ல்** திருநெல்வேலிக்குச் சென்று அங்கே **மா. வே. நெல்லை யப்ப பிள்ளை, பி. ஏ.,** அவர்களுடனும், தாகூர்ச்சட்ட விரிவுரையாளர் **கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்.,** அவர்களுடனும், வித்துவான் **பு. சி. புன்னை வனநாத முதலியார்** அவர்களுடனும் கலந்துபேசித் திருநெல்வேலியில் **சென்னை மாகாணத் தமிழர் மாநாடு** ஒன்று கூட்டுவதெனத் தீர்மானித்தனர்.

7–1–1934ல் வரவேற்புக் கழகம் அமைக்கப் பெற்றது. அதன் **தலைவர்** கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், **அமைச்சர்** இ. மு. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள், பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்.

2. சென்னை மாகாணத் தமிழர் முதலாவது மாநாடு

இது *10-6-1934* ஞாயிறு, *11-6-1934* திங்கள் ஆகிய இரண்டு நாட்களிலும் திருநெல்வேலியில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. செந்தமிழ்ப் புரவலர் **த. வே. உமாமகேசுவரன் பிள்ளை**, பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமை தாங்கினார்கள். அன்றைய அரசியல் அமைச்சர் **சர் பொ. தி. இராசன்**, அவர்கள் எம். ஏ., பார்–அட்–லா(இலண்டன்) மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ் நூற் காட்சி ஒன்று முதல் நாள் மாலையில் சர் பொ. தி. இராசன் அவர்கள் தலைமையில் தஞ்சை **ஆ. சோதிப்பாண்டியன்** அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றது.

11-6-1934 காலையில் **புலவர் மாநாடு** ஒன்று **சாமி வேதாசலம்** என்ற **மறைமலையடிகளார்** தலைமையில் திருவனந்தபுரம் இசைக்கவியரசர் **தி. இலட்சுமண பிள்ளை**, பி. ஏ., அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்று நடைபெற்றது.புலவர் மாநாட்டு வரவேற்புத் தலைவர் சித்தாந்தப் பேராசிரியர் மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள்.

3. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பெற்றது

உட்குழுவினர் அமைத்திருந்த சங்கத்தின் சட்ட திட்டங்களை எல்லாம் தமிழர் மாநாடு ஏற்றுக் கொண்டது. **சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் 11-6-1934 மாலையில் தோன்றியது.** சங்கத்தின் உறுப்பினராக அறுபத்திருவர் சேர்ந்தனர். அன்றிரவு *9–30* மணிக்குச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க உறுப்பினர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் சங்கத்தின் **பொறுப்பாளர் கழகம்** அமைக்கப் பெற்றது. பொறுப்பாளர் கழகம் அன்றிரவு பதினொரு மணிக்குக் கூடிச் சங்கத்தின் தொழிற் கழகத்தை அமைத்தது; அதன் தலைவர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்; துணைத் தலைவர் செ. தெ. நாயகம் அவர்கள்; அமைச்சர் டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள். பொருளாளர் மு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள். **இங்ஙனமாகச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தோன்றிச் செயலாற்றத் தொடங்கியது.** இது *28-7-1934* சனிக்கிழமை யன்று, *1860*-ம் ஆண்டு *21*–வது சட்டப்படி பதிவு செய்யப்பெற்று விளங்குகின்றது.

சென்னை மாகாணத் தமிழர் முதலாவது மாநாடு

(10, 11—6—1934) திருநெல்வேலி

இந்துக் கல்லூரி மேடைப் படிக்கட்டு

இடமிருந்து :— சோதிப்பாண்டியன், அலமேலு மங்கைத்தாயாரம்மாள், சர் பொ. தி. இராசன், முத்துக்கிருட்டின பிள்ளை, கா. சுப்பிரமணிய பிள்ளை, பொ. தி. இராசனுக்குப் பின்னால் I. C. ஈசுவரன் பிள்ளை, இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, அம்மையாருக்குப் பின்னால் பு. சி. புன்னைவனநாத முதலியார், மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

(பக்கம் 6 பார்க்க)

சென்னை மாகாணத் தமிழர் இரண்டாவது மாநாடு

திருநெல்வேலி, 30—12—1935.



T. இலட்சுமண பிள்ளை,

இருப்போர் :—இடமிருந்து வெ. ப. சுப்பிரமணிய முதலியார், சு. ஞானதேசிகம் பிள்ளை, T. சிவராம சேதுப்பிள்ளை, வி. நாடிமுத்துப் பிள்ளை, மேடை தளவாய் குமாரசாமி முதலியார், S. T பொன்னம்பலநாத முதலியார், சனக சங்கர கண்ணப்பர், T. K. சிதம்பரநாத முதலியார், மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

நிற்போர் :— இடமிருந்து முத்தையா, கோவிந்த மூப்பனர், தி. வே. நீலகண்டம் பிள்ளை, இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, சாமி வேலாயுதம் பிள்ளை, காருடை சூரிய மூர்த்திப் பிள்ளை, கா. சுப்பிரமணிய பிள்ளை, பிறவிப்பெருமாள் பிள்ளையன், வ. திருவரங்கம் பிள்ளை, ஆறுமுகம் பிள்ளை.

(பக்கம் 8 பார்க்க)

4. உயர்நிலைப்பள்ளிக் கலைச் சொல்லாக்கம்

நெல்லையிற் சொல்லாக்கக் கழகம்

சென்னை மாகாணத் தமிழர் முதலாவது மாநாடு மேலைநாட்டுக் கலைச்சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களை ஆக்குவதற்காக ஓர் உட்கழகத்தை அமைத்தது.

நமது சங்கத்தின் முதன்மையான நோக்கங்களுள், "தமிழ் மொழியை வளர்த்துப் பெருக்குதல், தமிழின் தூய்மையைக் காத்தல், பிறமொழி அறிவு நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தல், அங்ஙனம் மொழி பெயர்க்கும்போது ஏற்ற தமிழ்ச் சொல் கிடைத்திலதாயின் தமிழ்ப் பகுதியினின்றும் புதிய ஏற்புடைத் தமிழ்ச் சொல்லை ஆக்கல்" என்பன தலைசிறந்தன. முதலாவது மாநாட்டுத் தீர்மானத்தையும் சங்க நோக்கத்தையும் முன்னிட்டு நமது சங்கம் *14-10-1934* ஞாயிறன்று கலைச் சொற்களை ஆக்குவதற்கும், கலை நூல்களை எழுதுவதற்குமாகச் "**சொல்லாக்கக் கழகத்தை**" அமைத்தது.

அறிவுநூற் புலவர் மாநாடு

எளிதாகக் கையாளக் கூடியனவாயும் பொருத்தமாயனவாயும் உள்ள கலைச்சொற்களை உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஏற்ற அளவில் சொல்லாக்கக் கழகத்தார் பல கலைகளுக்கும் அமைத்தார்கள். அவைகளை ஆராய்ந்து முடிவு செய்வதற்குத் திருநெல்வேலியில் **அறிவு நூற்புலவர் மாநாடு** *1935* செப்டம்பர் *29, 30,* அக்டோபர் *1, 2, 3, 4, 5, 6, 7* ஆகிய ஒன்பது நாட்களிலும் நடைபெற்றது. அம் மாநாட்டின் தலைவர் இசைத் தமிழ்ச் செல்வர் **தி. இலட்சுமண பிள்ளை**யவர்கள். திருநெல்வேலி மாவட்ட ஆசிரியர் சங்கத்தார் பெருந்துணை புரிந்தனர். இந்த ஒன்பது நாட்களிலும் பூத நூல் (Physics), இயைபு நூல் (Chemistry), உடலியலும் நலவழியும் (Physiology & Hygiene) ஆகிய கலைகளுக்குச் சொற்கள் ஆராய்ந்து முடிவு செய்யப் பெற்றன. ஏனைய கணக்கு (Mathematics), இயற்கை நூல் (Natural Science) தரை நூல் (Geography), வரலாறு (History) ஆகிய கலைகளுக்குச் சொற்களை ஆராய்ந்து முடிவு செய்ய இம் மாநாடு மீண்டும் *25—12—1935* முதல் தொடங்கி, *7—1—1936* முடிய நடைபெற்றது. உட்குழு ஒன்று மேலும் பதினேழு நாட்கள் *23—2—1936* வரை இருந்து ஆராய்ந்து சொற்களை ஒழுங்குபடுத்தியது.

கலைச் சொற்கள்

இங்ஙனமாக ஆராய்ந்து முடிவு செய்யப்பெற்ற சொற்கள் "**கலைச்சொற்கள்**" என்ற பெயரோடு அச்சிடப்பெற்று ஒரு நூலாக வெளியிடப் பெற்றன. இக் கலைச் சொற்களில் ஐந்நூறு படிகள் பல துறையினருக்குத் திருத்தங்கள் கேட்டு அனுப்பப் பெற்றன. "நல்ல திருத்தங்கள் அனுப்புகிறவர்களில் முதல் மூவருக்குத் தக்க பரிசுகள் வழங்கப்பெறும்" என விளம்பரமும் செய்யப் பெற்றது.

சென்னை மாகாணத் தமிழர் இரண்டாவது மாநாடு

இதற்கிடையில் சென்னை மாகாணத் தமிழர் இரண்டாவது மாநாடு திருநெல்வேலியில் 30—12—1935 திங்களன்று காலை 9½ மணிக்குத் தொடங்கி நடைபெற்றது. தொடக்க உரை ஆற்றியவர், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்க்கலைக் குழுத் தலைவரும் புது தில்லியில் துணை மண்டலக் கணக்கரும் ஆகிய **T. சிவராம சேதுப்பிள்ளை** யவர்கள்; மாநாட்டுத் தலைவர் **வி. நாடிமுத்துப் பிள்ளை** யவர்கள்; வரவேற்புத் தலைவர் சீவைகுண்டம் வழக்குரைஞர் **தி. பொன்னம்பலநாத முதலியார்** அவர்கள்.

இசைத் தமிழ்ச் செல்வர் தி. இலட்சுமண பிள்ளையவர்களுடைய படம் **மேடை தளவாய் குமாரசாமி முதலியார்** அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

மாலையில் இசைக் கவியரசர் இலட்சுமண பிள்ளையவர்கள், தம் மாணவி சானகியம்மாளுடன் இசையரங்கு நடத்தினார்கள். பத்துத் தீர்மானங்கள் நிறைவேறின. இம் மாநாடு அறிவு நூற் புலவர் மாநாட்டுக்கு இடையிலே நடைபெற்றது.

சென்னையிற் கலைச் சொல்லாக்கம்

கலைச் சொற்களுக்கு முப்பத்து மூவர் திருத்தங்கள் அனுப்பினார்கள். அவைகளை ஆராய்ந்து முடிவு செய்யச் சென்னையில் கலைச் சொல்லாக்க மாநாடு நடத்துவதென்பது தீர்மானிக்கப்பெற்றது.

9—5—1936ல் சேலத்தில் **மாகாணக் கல்வி மாநாடு** சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் **S. E. அரங்கநாதன்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் சென்னையிற் கூட்ட இருக்கும் கலைச் சொல் மாநாட்டிற் கலந்து பெருந்துணைபுரியுமாறு ஆசிரியர்களையும், புலவர்களையும் அம் மாநாடு வேண்டிக் கொண்டது.

கலைச் சொல்லாக்க மாநாடு

1936 செப்டம்பர் 20–ம் நாள் ஞாயிறன்று சென்னையில் **தமிழ்க் கலைச் சொல்லாக்க மாநாடு** கூடிற்று. அதனைத் தொடங்கி வைத்தவர் திருவாங்கூர் திவான் **சர் C. P. இராமசாமி ஐயர்** அவர்கள்; அதன் தலைவர் **சாமி விபுலானந்தர்** அவர்கள்; வரவேற்புத் தலைவர் **T. S. நடராச பிள்ளை, பி. ஏ., பி. எல்.,** அவர்கள்.

சென்னைப் பல்கலைக் கழகமும், இலங்கை அரசாங்கமும், தென்னிந்திய ஆசிரியர் சங்கமும், தென்னிந்திய தமிழ்ச்சங்கமும், தக்காரைத் தம் சார்பாக மாநாட்டுக்கு அனுப்பியிருந்தன. சொல்லாக்கக் கழகங்கள் தக்கார் தலைமையில் அமைக்கப் பெற்று வந்திருந்த திருத்தங்களுடன் சொற்களை ஆராய்ந்து முடிவு செய்தன.

சென்னை மாகாணத் தமிழர் மூன்றாவது மாநாடு

27—9—1936 ஞாயிற்றுக்கிழமை யன்று சென்னை மாகாணத் தமிழர் மூன்றாவது மாநாடு சென்னையில் திவான் பகதூர் **கீ. தெய்வசிகாமணி முதலியாரவர்கள்** தலைமையிற் கூடிற்று. **சக்கரவர்த்தி இராச கோபாலாச்சாரியாரவர்களும்** கலந்து கொண்டார்கள். கலைச் சொல்லாக்கத்தைப் பாராட்டியும் தீர்மானம் நிறைவு பெற்றது.

சென்னைக் கலைச் சொல்லாக்க மாநாடு

20—9—1936.



இருப்போர் :—இடமிருந்து—P. சம்பந்த முதலியார், கீ. தெய்வசிகாமணி முதலியார், சாமி விபுலானந்தர், சர் C.P. இராமசாமி ஐயர், T.S. நடராச பிள்ளை, G. A. நடேசன், S. வையாபுரி பிள்ளை

நிற்போர் :— இடமிருந்து—திருஞானசம்பந்த முதலியார், இரா. பி. சேதுப்பிள்ளை, இரத்தினசபாபதி முதலியார், டாக்டர் வரதராசுலு நாயுடு, கீ. சி. இராமசாமி ஐயர், அ. முத்தையா பிள்ளை, மணி கோடீசுவர முதலியார், K. சம்பந்தம் பிள்ளை, இ.மு. சுப்பிரமணிய பிள்ளை, G. நாராயணசாமி ஐயர், சாமி வேலாயுதம் பிள்ளை.

(பக்கம் 8 பார்க்க)

சென்னைக் கலைச் சொல்லாக்கக் கழகம், 1936.



இருப்போர் :—இடமிருந்து—இரா. பி. சேதுப் பிள்ளை, கீ. சி. இராமசாமி ஐயர், மீனும்பாள் சிவராசு, சாமி விபுலானந்தர், கீ. தெய்வசிகாமணி முதலியார், மு. சி. பூர்ணலிங்கம்பிள்ளை, துடிசைக்கிழார் அ.சிதம்பரனுர்,

நிற்போர் :— இடமிருந்து—வரிசை 1. N. சுப்பிரமணிய ஐயர், M. S. சபேச ஐயர், K. C. வீரராகவ ஐயர், அ. முத்தைய பிள்ளை, ஆ. அருள்தங்கையா, மணி கோடீசுவரன்.

வரிசை 2. T. செங்கல்வராய பிள்ளை, K. M. சுப்பிரமணிய ஐயர், R. மகாதேவன், திருஞானசம்பந்த முதலியார், இ.மு. சுப்பிரமணிய பிள்ளை, க. ப. சந்தோசம், V. P. கமலநாதன்.

வரிசை 3. C. கண்ணுச்சாமி பிள்ளை, வ. சுப்பையாப் பிள்ளை, தேவநேயப்பாவாணர், சாமி வேலாயுதம் பிள்ளை. (பக்கம் 8 பார்க்க)

கலைச்சொல் அரங்கேற்று மாநாடு

கலைச் சொற்கழகத்தார் முடித்துத் தந்த கலைச் சொற்கள் ஒழுங்குபடுத்தப் பெற்றன. அவைகளை அரங்கேற்றுமுகத்தால் சென்னையில் 23—12—1937 வியாழக்கிழமை மாலை 5–30 மணிக்கு மாநாடு நடை பெற்றது. அதனைத் தொடங்கி வைத்தவர் கல்வி அமைச்சர் டாக்டர் **P. சுப்பராயன்** அவர்கள், தலைமை தாங்கியவர் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் S. E. **அரங்கநாதன்** அவர்கள்.

அரசாங்கத் தேர்வுக் குழுச் செயலாளர் **கிருட்டின ராவ்பான்சிலே** அவர்கள், "சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் அரும்பாடுபட்டு ஆக்கியுள்ள கலைச்சொற்களை அரசாங்கமும், பல்கலைக் கழகங்களும் ஏற்றுக் கொள்ளு தல் வேண்டும்" என்ற தீர்மானம் கொண்டு வந்தனர். மாநாடு அதனை ஒருமுகமாக ஏற்றுக்கொண்டது.

" கலைச் சொற்கள் "

சென்னைப் பல்கலைக் கழகத்தார், திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தார், சென்னை முதலமைச்சர் ச. இராச கோபாலாச்சாரியாரவர்கள் இவர்களுடைய பொருட் கொடை கொண்டு சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் தாம் மேலே கண்டாங்குப் பலபட ஆராய்ந்து ஆக்கிய "**கலைச் சொற்களை**" அச்சிட்டு வெளி யிட்டார்கள்.

சென்னை அரசாங்கம் கலைச் சொற்படிகள் அறுநூறு வாங்கி மாகாணக் கல்வி இயக்குநர் வழியாக உயர் பள்ளிகளுக்கெல்லாம் அரசாங்கச் செலவில் அனுப்பி, "அச்சொற்களை ஆசிரியர்கள் தாராளமாகப் பயன் படுத்திக் கலைப்பாடங்களைக் கற்பித்தல் வேண்டும்" என்று சுற்றாணையும் அனுப்பியது. அவ்வாணைப் படி பின் வருவது :

GOVERNMENT OF MADRAS

Memo. No. 45290 B-3 dated 9th Nov. 1938.

Sri E. M. Subramania Pillai is informed as a token of encouragement to the work of the Tamil Sangam, the Government have ordered that a copy of the "Kalai Chorkal" should be supplied to each of the Secondary schools in the Tamil Districts at Government cost. The Director of Public Instruction is taking steps for the supply. He is being further asked to inform School managements that teachers may freely use the terms in "Kalai Chorkal"

C. H. MASTERMAN,
Secretary to Government.

தமிழ் நாடு காங்கிரசு மாநாடு *1938*–ல் இராச பாளையத்தில் நடைபெற்றது. அதில், 'கலைச் சொற் களை நிலை நாட்டுவதில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்துக்குத் தமிழ் மக்களனைவரும் பெருந்துணை புரிய வேண்டும்' என்ற தீர்மானம் நிறைவேறியது.

கலைச் சொற்களுக்குப் பரிசளிப்பு

சென்னை மாகாணத் தமிழர் ஆறாவது மாநாடு திருநெல்வேலியில் இசைக் கவியரசர் **தி. இலட்சுமண பிள்ளையவர்கள்** தலைமையில் 30—9—1939 சனி, 1—10—1939 ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களிலும் நடைபெற்றது. அதன் வரவேற்புத் தலைவர் **மா. வே. நெல்லையப்பபிள்ளையவர்கள்.** கலைச் சொல்லாக்கத்தில் முதன்மை பெற்ற மூவருக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன. கோவை மாவட்ட ஆசிரியர் சங்கத்திற்கு முதற் பரிசு கிடைத்தது.

5. மாநாடுகள்

ஏழாவது மாநாடு

மந்திரிகள்வழி ஆட்சியை ஒழித்து நேரடி ஆட்சியை மேற்கொண்ட சென்னை ஆளுநர் (Governor) ஆட்சியில் **V. S. சீனிவாச சாத்திரியார்** அவர்கள் தலைமையில் ஒரு சொல்லாக்கக் கழகம் அரசினரால் அமைக்கப்பட்டது. 'தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளைக் கொண்டுள்ள சென்னை மாகாணத்தின் உயர் பள்ளிகளுக்குப் பொதுவான கலைச் சொற்களை அமைக்க வேண்டும்' என்றும், "அவ்வாறு அமைப்பதில் வடமொழி அடியான சொற்களைப் பெரும்பாலும் ஆக்க வேண்டும்" என்றும் அக்கழகம் தீர்மானித்தது.

சென்னை மாகாணத் தமிழச்சங்கம் ஆக்கியுள்ள கலைச் சொற்களைப் பெரும்பாலும் தழுவியே தமிழுக்குக் கலைச்சொற்கள் அமைக்கப் பெறும் என்று அக்கழகச் செயலாளர் கூறினர். என்றாலும் அக்கழகம் பல பிற மொழிச் சொற்களைச் சேர்த்துத் தமிழ் வரம்பினை அழித்துவிடும் என்று எண்ணிச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் சென்னை மாகாணத் தமிழர் ஏழாவது மாநாட்டினை 24—12—1940 செவ்வாய், 25—12—1940 புதன் ஆகிய இரண்டு நாட்களிலும் சென்னையிற் கூட்டி, அரசாங்கத்தின் தவறான போக்கினை எடுத்துக்காட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றியது.

ஏழாவது மாநாட்டின் தலைவர் அன்று இந்து அறநிலைய ஆட்சிக் கழகத் தலைமை நடாத்திய திவான் பகதூர் **T. M. நாராயணசாமிப் பிள்ளையவர்கள்**; திறப்பாளர் **சர் குமாரராசா முத்தையாச் செட்டியார்** அவர்கள்; வரவேற்புத் தலைவர் இராவுபகதூர் டாக்டர் **T. S. திருமூர்த்தி ஐயர்** அவர்கள். இலங்கைச் சட்ட சபை உறுப்பினர் **S. நடேச பிள்ளையவர்கள்** தமிழ்க் கொடி யேற்றினர்கள்.

சென்னை மாகாணத் தமிழர் மூன்றாவது மாநாடு, சென்னை.

27—9—1936



இடமிருந்து :—வரிசை 1—துடிசைக்கிழார் அ. சிதம்பரனார், R. வைத்தியநாத சாத்திரியார், அ. முத்தைய பிள்ளை, கீ. சி. இராமசாமி ஐயர், கீ. தெய்வசிகாமணி முதலியார், ச. இராசகோபாலாச்சாரியார், T. S. நடராச பிள்ளை, இ. மு. சுப்பிரமணிய பிள்ளை.

வரிசை 2—சாமி வேலாயுதம் பிள்ளை, சண்முகம் பிள்ளை, மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை.

வரிசை 3—V. P. கமலநாதன், N. தண்டபாணி பிள்ளை, P. M. பாலசுப்பிரமணிய முதலியார், மணி கோடீசுவரன், திருஞானசம்பந்த முதலியார், ஆ. அருள்தங்கையா.

(பக்கம் ௮ பார்க்க)

கலைச் சொல் அரங்கேற்று மாநாடு, சென்னை,
23—12—1937, வியாழம்.



இடமிருந்து :— முதல் வரிசை—ஆலால சுந்தரம் செட்டியார், பேராசிரியர் அ. முத்தையா, கல்வி அமைச்சர் P. சுப்பராயன், துணை வேந்தர் சர் S. E. அரங்கநாதன். சோமசுந்தரம், வேணுகோபால பிள்ளை.

பின் வரிசையில் பண்டித ஆனந்தம், சிவஞான முதலியார், கிருட்டின ராவ் பான்சிலே, ஆ. அருள் தங்கையா முதலானோர். (பக்கம் 9 பார்க்க)

இதில் பெரியார் எண்மருக்குச் செப்புப் பட்டயங்களுடன் பட்டங்கள் வழங்கப்பெற்றன. இம்மாநாட்டுடன் *25-12-1940ல்* **புலவர் மாநாடு** முதுபெரும் புலவர் மகாமகோபாத்தியாய பண்டிதமணி **மு. கதிரேசச் செட்டியார்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதனைத் தொடங்கி வைத்தவர் முன்னை மந்திரி **S. முத்தையா முதலியார்** அவர்கள்.

எட்டாவது மாநாடு

சென்னை மாகாணத் தமிழர் எட்டாவது மாநாடு, தஞ்சாவூரில் **கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரால்** *29-12-1941* திங்கள், *30-12-1941* செவ்வாய் ஆகிய இரண்டு நாட்களிலும் நடத்தி வைக்கப்பெற்றது. தஞ்சை நாட்டாண்மைக் கழகத் தலைவர் **வி. நாடிமுத்துப் பிள்ளை**யவர்கள் கொடியேற்றித் தலைமை தாங்கினர்கள். திருநெல்வேலி, திவான் பகதூர் **பி. ஆவுடையப்ப பிள்ளை**யவர்கள் தொடங்கி வைத்தார்கள். இதன் வரவேற்புத் தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் இராவுசாகிபு **ஐ. குமாரசாமிப் பிள்ளை**யவர்கள்.

இம்மாநாட்டில் " **பல்கலை வள்ளல்** " என்ற பட்டம் செப்புப் பட்டயத்துடன் **செட்டிநாட்டு** அரசர் **சர். அண்ணாமலைச் செட்டியார்** அவர்களுக்குத் **தருமபுரம் ஆதீனத்** தலைவரவர்கள்வழி வழங்கப்பெற்றது. இதனுடன் *30-12-1941ல்* **புலவர் மாநாடு** நடைபெற்றது. அதன் தலைவர் பல்கலைப்புலவர் **கா. சுப்பிரமணிய பிள்ளை**யவர்கள்; தொடங்கியவர் திவான்பகதூர் **கீ. தெய்வ சிகாமணி முதலியார்** அவர்கள்.

ஒன்பதாவது மாநாடு

இது திருநெல்வேலியில் *27-3-1943* சனி, *28-3-1943* ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களிலும் செந்தமிழ்ப் புரவலர் இராவுபகதூர் **கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதன் வரவேற்புத் தலைவர் இராவுசாகிபு டாக்டர் **ப. கு. சுப்பிரமணிய பிள்ளை**யவர்கள்; தொடங்கி வைத்தவர் **தி. மு. பாண்டிப்பெருமாள் பிள்ளை**யவர்கள். தமிழ்க் கொடியேற்றியவர் முன்னைமந்திரி சர் **பொ. தி. இராசன்** அவர்கள். இம்மாநாட்டினுடன் **இசைப்புலவர் மாநாடு** *28-3-1943* காலையில் நடைபெற்றது. இதன் தலைவர் இசைக் கவியரசர் **தி. இலட்சுமண பிள்ளை**யவர்கள். இதைத் தொடங்கி வைத்தவர் **செ. தெ. நாயகம்** அவர்கள்.

பத்தாவது மாநாடு

இது மதுரை மாநகரில் *30-12-1943* வியாழக்கிழமை செந்தமிழ்ப் புரவலர் **கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதன் வரவேற்புத் தலைவர் **இ. மா. கோபாலகிருட்டினக் கோனர்** அவர்கள். இதைத் தொடங்கி வைத்தவர் முதுபெரும் புலவர் **மு. கதிரேசச் செட்டியார்** அவர்கள்.

இத்துடன் நடைபெற வேண்டிய **புலவர் மாநாடு** வாலாசாபாத்தில் *5-5-1944* வெள்ளி, *6-5-1944* சனி ஆகிய இரண்டு நாட்களிலும் முதுபெரும் புலவர் **மு. கதிரேசச் செட்டியார்** அவர்கள் தலைமையில் இராவுசாகிபு **T.S. நடராச பிள்ளை**யவர்கள் தொடங்கி வைக்கச் சிறப்பாக நடைபெற்றது. இதன் வரவேற்புத் தலைவர் செங்கற்

பட்டு நகராட்சித் தலைவர் இராவுசாகிபு **வேதாசல முதலியார்** அவர்கள்.

பதினோராவது மாநாடு

இது **சென்னையில்** *24—3—1945* சனி, *25—3—1945* ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களிலும் திவான்பகதூர் **T. M. நாராயணசாமிப் பிள்ளை**யவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றுச் சென்னை மாநகராட்சித் தலைவர் **M. இராதாகிருட்டினப் பிள்ளை**யவர்களின் தலைமையில் நடைபெற்றது; கொடியேற்றியவர் **சாமி வேலாயுதம் பிள்ளை**யவர்கள்; வரவேற்புத் தலைவர் **மா. பாலசுப்பிரமணி முதலியார்** அவர்கள்.

இம்மாநாட்டுடன் **புலவர் மாநாடு** *25-3-1945*-ல் **கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார்** அவர்கள் தலைமையில் **T. செங்கல்வராயன்** அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்று நடைபெற்றது.

பன்னிரண்டாவது மாநாடு

இது திருநெல்வேலியில் *18-5-1946* **சனி**, *19-5-1946* ஞாயிற்றுக் கிழமைகளில் இசைக் கவியரசர் **தி. இலட்சுமண பிள்ளை**யவர்களால் கொடியேற்றப் பெற்று **தி. மு. நெல்லையப்ப பிள்ளை**யவர்கள் தொடங்கி வைக்கப் பேராசிரியர் **மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை**யவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதன் வரவேற்புத் தலைவர் **மேடைதளவாய் குமாரசாமி முதலியார், எம். எல். சி.,** அவர்கள்.

இதனுடன் புலவர் மாநாடு *19-5-1946*ல் **இசைக்கவியரசர் தி. இலட்சுமண பிள்ளை**யவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றுப் பேராசிரியர் டாக்டர் **அ. சிதம்பரநாதன் செட்டியார்** அவர்கள் தலைமை தாங்க, இனிது நடந்தேறியது. இதன் வரவேற்புத் தலைவர் **வா. மு. கலியாணசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்.,** அவர்கள்.

பதின் மூன்றாவது மாநாடு

இது சென்னையில் *30—5—1947* ஞாயிறன்று சட்டசபைத் தலைவர் **J. சிவசண்முகம் பிள்ளை**யவர்களால் தமிழ்க் கொடி யேற்றப்பெற்று, C. N. **முத்துரங்க முதலியார்** அவர்கள் தலைமையில் கல்வி அமைச்சர் **T. S. அவிநாசிலிங்கம் செட்டியார்** அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதன் வரவேற்புத் தலைவர் **நா. வரதராசுலு நாயுடு** அவர்கள்.

சென்னை மாகாணத் தமிழர் ஏழாவது மாநாடு, சென்னை.
24, 25—12—1940.

முதல் வரிசை :—இடமிருந்து—C. M. இராமச்சந்திரன் செட்டியார், C. K. சுப்பிரமணிய முதலியார், மந்திரி S. முத்தைய முதலியார், T. S. திருமூர்த்தி, T. M. நாராயணசாமி பிள்ளை, செட்டி நாட்டு இளவரசர் முத்தையாச் செட்டியார், இலங்கை மந்திரி நடேச பிள்ளை, (அவர் மனைவியார், மாமியார்) அலமேலு மங்கைத் தாயாரம்மாள், T. S. நடராச பிள்ளை.

பின் வரிசை வலமிருந்து—மு. சுப்பிரமணியன் செட்டியார், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, மறை திருநாவுக்கரசு,......,அ. முத்தையா, குஞ்சித பாதம் பிள்ளை

(பக்கம் 10 பார்க்க)

சென்னை மாகாணத் தமிழர் பதினான்காவது மாநாடு, திருநெல்வேலி.
18—10—1953



நிற்பவர் :—இடமிருந்து—சி. ச. அருணாசலம் பிள்ளை, சொ. அமுத கணேச முதலியார், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, சு. இராமசாமிக் கோனார், மு. சுப்பிரமணியன் செட்டியார், கசபதி நாயகர், சுப்பையாப் பிள்ளை, பிரகாச நாடார்.

இருப்பவர் :—இடமிருந்து இரண்டாவது செல்வச்சாமிப் பாண்டியன், மூன்றாவது முத்துக் குமாரசாமி பிள்ளை.

(பக்கம் 13 பார்க்க)

ஆட்சி மொழி மாநாடு, சென்னை
20-12-1952.



தலைவர் கசபதி நாயகர் பேசுகிறார்.
பின்னால் அமைச்சர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை.
கி. ஆ. பெ. விசுவநாதம் முதலியோரைக் காண்க.
(பக்கம் 14 பார்க்க)

ஆட்சி மொழி மாநாடு, சென்னை.
20-12-1953



இடமிருந்து :—முதல் வரிசை—விநாயகம் (பேசுகிறார்), இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, கி. ஆ. பெ. விசுவநாதம், கசபதி நாயகர், சுயம் பிரகாசம்.
(பக்கம் 14 பார்க்க)

6. மறுபடியும் உயர் நிலைப் பள்ளிக் கலைச் சொல்லாக்கம்

அரசாங்கத்துக்கு எடுத்து மொழிதல்

கனம் **சீனிவாச சாத்திரியார்** அவர்கள் சொல்லாக்கக் கழகத்தார் அமைத்த கலைச் சொற்களைக் கல்வித் துறையினர் அச்சிடத் தொடங்கினார்கள். அச் சொற்களில் பிற மொழிச் சொற்கள் மலிந்திருந்தமையை அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டித் "தக்க பெரியாரைக் கொண்டு, அச்சொற்களைத் திருந்த அமைத்தல் வேண்டும்" என்பதை எடுத்து மொழியச் சென்னையில் 10–10–1946 வியாழக்கிழமை கோகலே மண்டபத்தில் தென்னிந்தியத் தமிழ்ச் சங்கத்தின் வழியாக ஒரு மாநாட்டினை நமது சங்கம் காங்கிரசு முதல்வர் **C. N. முத்துரங்க முதலியார்** அவர்கள் தலைமையில் நடத்தியது.

கலைச் சொல்லாக்கம்

அதன் விளைவாகச் சென்னை அரசாங்கம் நம் சங்கம் குறிப்பிட்ட கலைப்புலவர்களைச் சொல்லாக்கக் கழகத்திற் சேர்த்துக் கலைச் சொற்களைத் திருந்த ஆராய்ந்து முடிவு செய்து வெளியிட்டது. சங்க அமைச்சர் **டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்** மூன்று மாதங்கள் சென்னையில் தங்கி ஒவ்வோருட்கழகத்திலும் கலந்து தக்க சொற்களை விரைவில் ஆக்கி அரசாங்கத்திற்கு உதவினார்கள்.

7. தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கியது

பதினான்காவது மாநாடு

திருநெல்வேலியில் பதினான்காவது மாநாடு 18–10–1953 ஞாயிறு காலை 9–30 மணி தொடங்கி முன்னை மந்திரி **சர் பொ. தி. இராசன்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முன்னை மாவட்ட நீதிபதி **ஆ. கசபதி நாயகர்** அவர்கள் தொடங்கி வைத்தார்கள். **சொக்க. அமுதகணேச முதலியார்** அவர்கள் தமிழ்க் கொடியேற்றினார்கள். இதன் வரவேற்புத் தலைவர் **சு. இராமசாமிக் கோனார்** அவர்கள்.

அன்று காலையில் புலவர் மாநாடு நாவலர் **ச. சோம சுந்தர பாரதியார்** அவர்கள் தலைமையில் குலசை **ஆ. சுப்பையாப் பிள்ளை** அவர்களால் தொடங்கிவைக்கப் பெற்று இனிது நடந்தேறியது. இதன் வரவேற்புத் தலைவர் **மு. சுப்பிரமணியன் செட்டியார்** அவர்கள்.

"தமிழ்நாட்டில் தமிழிலேதான் ஆட்சி நடைபெறுதல் வேண்டும் என்பதை அரசினரிடம் வற்புறுத்துமாறு சென்னையில் **ஆட்சிமொழி மாநாடு** நடத்துதல் வேண்டும்" என்ற தீர்மானம் ஒருமுகமாக நிறைவேறியது.

ஆட்சி மொழி மாநாடு

பதினைன்காவது மாநாட்டுத் தீர்மானப்படி **சென்னை** யில் 20–12–1953 ஞாயிறன்று அண்ணாமலை மன்றத்தில் ஆட்சி மொழி மாநாடு இனிது நடைபெற்றது. அதன் தலைவர் மாவட்ட முன்னை நீதிபதி **ஆ. கசபதி நாயகர்** அவர்கள். வரவேற்புத் தலைவர் **சொக்க. அமுதகணேச முதலியார்** அவர்கள். சட்டசபையில் திராவிட பார்லிமெண்டுக் கட்சித் தலைவராகிய **S. சுயம்பிரகாசம்** அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள்.

கே. விநாயகம் அவர்கள், ப. சீவானந்தம் அவர்கள், கே. சாம்பசிவ ரெட்டியார் அவர்கள், ஏ. கோவிந்தசாமி நாயகர் அவர்கள், பி. இராமமூர்த்தி அவர்கள், கவிஞர் கா. மு. செரிபு அவர்கள், ப. அன்பழகன் அவர்கள், மயிலை சிவமுத்து அவர்கள், சீவா. நாரண. துரைக் கண்ணன் அவர்கள், இராகவ முதலியார் அவர்கள், டி. சண்முகம் பிள்ளை அவர்கள், பி. அரங்கசாமி ரெட்டியார் அவர்கள், டி. கணபதி அவர்கள், இரா. நெடுஞ் செழியன அவர்கள், டி. கே. சண்முகம் அவர்கள், கா. அப்பாத்துரைப் பிள்ளை அவர்கள், கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், இளவழகனர் அவர்கள் ஆகிய பல கட்சித் தலைவர்களும் சட்டசபை உறுப்பினர்களும் புலவர்களும் மாநாட்டிலே தீர்மானத்தைத் தாங்கிப் பேசினர்கள்.

''சட்டம் செய்து தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்குக'' என்ற தீர்மானம் நிறைவேறியது. காங்கிரசுக் கட்சித் தலைவர் **காமராசனர்** அவர்கள் முதன் மந்திரியாக ஆனவுடன் சங்க அமைச்சர் அவர்கள் பல தலைவர்களுடன் சென்று அவர்களைக் கண்டார்கள். அப்போது காமராசனர் அவர்கள், **''நாம் தமிழை ஆட்சி மொழி ஆக்குவோம்''** என்று உறுதி மொழிந்தார்கள்.

நெல்லையில் ஆட்சிச் சொல்லாக்கம் தொடங்குதல் விழா

''உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழி வழியாகவே பாடங்களெல்லாம் கற்பிக்கப் பெறுதல் வேண்டும்'' என்ற அரசாங்க ஆணை வெற்றியாக நடைபெறும் பொருட்டு அரும்பாடுபட்டு முன் கலைச்சொற்களை ஆக்கி வெளியிட்டு உதவியதுபோல, இப்பொழுதும் **அரசாங்கம் ஆட்சியைத் தமிழிலே நடத்துவதற்குத்** தகுந்த துணை புரியும் பொருட்டு நமது சங்கம் 30-1-1955ல் நடைபெற்ற ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் ''ஆட்சிச்சொல் அகராதியை ஆக்கித் தமிழ் நாட்டின் ஆட்சி தமிழிலே நடைபெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும்'' என்று தீர்மானித்தது. அதனை நிறைவேற்றும் பொருட்டுச் சங்க அமைச்சரவர்கள் சங்கத் தொழிற்கழக உறுப்பினர் டாக்டர் **தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை,** L. C. P. S., L. M. S. S. A., M. R. A. S. (London) அவர்களுடன் சேர்ந்து பாளையங்கோட்டையில் பெருமாள்புரத்தில் 11-4-1955 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு முன்னை நீதிபதி **தா. கோமதிநாயகம் பிள்ளை,** பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் ஆட்சிச் சொல்லாக்கக் கழகத்தை அமைத்தார்கள். சங்கத் தொழிற்கழகம் அதனை 17-4-'55ல் ஏற்றுக்கொண்டதுடன் 21-4-'55 வியாழக்கிழமை திருநெல்வேலியிலுள்ள இந்துக் கல்லூரியிற் பேரவை கூட்டி, அப்போது நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவராக

சென்னை ஆட்சிச் சொல்லாக்கக் கழக உட்குழு



இடமிருந்து :—கோதண்டபாணி பிள்ளை, இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, S. வெங்கடேசுவரன். மா. அனந்தநாராயணன், R. V. கிருஷ்ண ஐயர்.

(பக்கம் 18 பார்க்க)

நெல்லை ஆட்சிச் சொல்லாக்கக் கழகம்
தொடங்குதல் விழா.
21—4—1955



இடப்புறமிருந்து :—விழாத் தலைவரும் மாவட்ட ஆட்சித் தலைவருமாகிய பாலகிருட்டின பிள்ளை, கழகத் தலைவர் T. கோமதிநாயகம் பிள்ளை, சங்கத் தலைவர் சு. இராமசாமிக்கோனார், அமைச்சர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை.

(பக்கம் 14 பார்க்க)

நெல்லை ஆட்சிச் சொல்லாக்கக் கழகம்
தொடங்குதல் விழா.
21—4—1955



இடப்புறமிருந்து :—J. சக்கரபாணி நம்பியார், மு. அ. குற்றாலலிங்கம் பிள்ளை, இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, T. கோமதிநாயகம் பிள்ளை, பாலகிருட்டின பிள்ளை, சு. இராமசாமிக் கோனார், முதலியோர்.

(பக்கம் 14 பார்க்க)

இருந்த S. M. பாலகிருட்டின பிள்ளை I. A. S., அவர்களைக் கொண்டு அக் கழகத் தொடக்கவிழாவை மிக்க சிறப்பாக நடாத்தியது. அக் கழக உறுப்பினர் அனைவரும் நாட்டாட்சியின் பல துறைகளிலும் பல்லாண்டு பணியாற்றிய தலைமை அலுவலாளராக அமைந்தது பெரிய வாய்ப்பே.

ஆட்சிச்சொற் சுவடியில் ஆட்சிக்கு வேண்டிய பல சொற்களும், சிலர் மிகை எனக் கருதக் கூடும் சொற்களும் இடம் பெற்றுள்ளன. ஆட்சிக்கு வேண்டிய சட்டக் கலைச்சொற்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. அவைகளைக் கொண்டு ஆட்சித் தேவைகள் யாவும் தமிழிலேயே விளக்கக்கூடும்.

அதனை ஆக்குவதில் முதன்மையாக மேற்கொள்ளப் பெற்ற கொள்கை, வடமொழியானாலும் சரி, உருது, ஆங்கிலம் முதலிய பிற மொழிகளானாலும் சரி மக்கள் எளிதாக அறிந்துகொள்ளக்கூடிய சொற்களையே முதன்மையாகக் கொள்ள வேண்டும் என்பது. அவ்வாறுய சொற்கள் தமிழிலும் வடமொழி முதலிய வேறு எந்த மொழியிலும் சமமாக வழங்குமானால் தமிழ்ச் சொற்களையே முதன்மையாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். தமிழாட்சிச் சொற்கள் தமிழாகவே இருத்தல் வேண்டும் என்பதை அறிஞர் யாரும் மறுக்க மாட்டார்கள்.

பிறமொழிச் சொற்களுக்கு ஈடாக நல்ல தமிழ்ச் சொற்கள் பக்கத்தில் பிறைக்கட்டுகளில் தரப்பெற்றன. அவை நன்கு வழங்கித் தமிழ் நடையைச் சிறப்பிக்கக் கூடியவை. அவைகள் பழக்கத்தில் நிலைபெறும்போது பிறமொழிச் சொற்கள் தாமாகவே வழக்கிறந்து போகும். உதாரணம் பின்வருமாறு:– சில்லாக் கலெக்டர் (மாவட்ட ஆட்சித் தலைவர்), மசோதா (சட்டமூலம்), சூரியகிரகணம் (இரவி மறைவு), சந்திர கிரகணம் (திங்கள் மறைவு). சில்லாக் கலெக்டர், மசோதா, சூரியகிரகணம், சந்திர கிரகணம் என்பன இப்போது பலரும் அறிந்த பிற மொழிச் சொற்கள். மாவட்ட ஆட்சித் தலைவர், சட்ட மூலம், இரவி மறைவு, திங்கள் மறைவு என்பன நல்ல தமிழ்ச் சொற்கள்; பிற்காலம் இவை நன்கு வழங்கக் கூடியன. இவை வழங்கும் காலம்வரை இப்போது வழக்கிலுள்ள சில்லாக் கலெக்டர் போன்ற சொற்களை நாம் பயன்படுத்தியே ஆகவேண்டும். இவைகளை எழுதும் போது தமிழ் மரபுப்படி தமிழ் எழுத்துக்களில் எழுதுதல் வேண்டும்.

"ஜில்லா" என்பதை "சில்லா" என்றும், "மாஜிஸ்டிரேட்" என்பதை "மாசிஃச்டிரேட்டு" என்றும், "போலீஸ்" என்பதைப் "போலீசு" என்றும், "கிரஹணம்" என்பதைக் "கிரகணம்" என்றுமே எழுதுதல் வேண்டும். க்ஷ, ஸ, ஷ, ஜ, ஹ என்பன கிரந்த எழுத்துக்கள். இவைகளைத் தமிழிற் கலந்து எழுதுவது தவறு. "க்ஷ"வை "ட்ச" என்றும், "ஸ்"ஐ "த்" என்றும், "ஷ்"ஐ "ட்" என்றும், "ஜ"வைச் "ச" என்றும், "ஹ"வைக் "க" என்றும்தான் தமிழில் எழுதுதல் மரபு. "ஸ்" என்பதை "த்" என்று எழுதுதல்தான் மரபு என்றாலும் சிலர் "ஸ்" ஒலியைத் தமிழில் எழுதுதல் வேண்டும் என்று விரும்புகின்றனர். அதன்படி "ஸ்" என்பது "ஃச்" என்று குறியிட்டுச் சில இடங்களிற் குறிக்கப்பெற்றுள்ளது. உதாரணம்:

Bus, பஸ், பஃச்; Magistrate, மாஜிஸ்டிரேட் மாசிஃச் திரேட்டு. "F" என்ற ஆங்கில எழுத்தொலி சிலரால் "ஃப்" என்று குறிப்பிடப் பெறுகிறது, உதாரணம்: Africa ஆஃப்ரிக்கா; இதனை ஆபிரிக்கா என்று வழங்கு வதே தமிழ் மரபு.

நெல்லை ஆட்சிச் சொல்லாக்கக் கழகப் பணி

சங்க அமைச்சர் டாக்டர் **இ. மு. சுப்பிரமணிய பிள்ளை** அவர்களும் தமிழ்ப் பேராசிரியர் **ஆ. அருளப்பன்** பி. ஏ., அவர்களும் பலநாட்கள் ஒவ்வொரு தடவையிலும் பல மணி நேரங்கள் திருநெல்வேலி இந்துக் கல்லூரி ஆட்சிச் செயலாளரவர்கள் அறையிற்கூடி, சங்க அமைச் சரவர்களால் திரட்டப்பெற்ற ஆங்கில ஆட்சிச் சொற் களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைக் கண்டு அமைத்தார் கள். அச் சொற்களையே ஆட்சிச் சொல்லாக்கக் கழகத் தார் ஆராய்ந்து முடிவு செய்தனர். கழகக் கூட்டங்கள் பெருமாள்புரத்தில் நடைபெற்றன. முப்பத்தெட்டுத் தடவைகளில், ஒவ்வொரு தடவையிலும் குறைந்தது இரண்டரை மணி நேரங்கள் ஆராய்ச்சி நடைபெற்றது. ஒவ்வொரு தடவையிலும் கூட்டத் தொடக்க முதல் முடிவு வரையில் கழகத் தலைவர், தா. கோமதிநாயகம் பிள்ளையவர்கள் உடனிருந்து ஆராய்ந்தமை குறிப்பிடத் தக்கது. பேராசிரியர் ஆ. அருளப்பன் அவர்கள் காட்டிய பேருக்கம் மிகப் பெரியது. *1-8-1955*ல் காலையில் ஆட்சிச் சொல்லாக்கம் நிறைவு பெற்றது.

பாராட்டு விழா

*9-8-1955*ல் இந்துக் கல்லூரியில் ஒரு பொதுக்கூட் டம் இராவுபகதூர் **மு. அ. குற்றாலலிங்கம் பிள்ளை** பி.ஏ., (ஓய்வுபெற்ற சென்னை அரசாங்க உணவுச் செயலாளர்) அவர்கள் தலைமையிற் கூடி ஆட்சிச் சொல்லாக்கக் கழகத்தார் தொண்டினைப் பாராட்டியது.

மேலும் ஆட்சிச்சொற்கள் ஆராய்ச்சி

திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் **R. S. மலையப்பன் I. A. S**, அவர்கள் *9—8—1955* (Rc. C. 4/10027/55) கடி தத்துடன் தங்கள் வேலைநிலையத்தில் அமைக்கப்பெற்ற ஏறத்தாழ ஐந்நூறு ஆங்கிலச் சொற்களுக் கேற்ற தமிழ் ஆட்சிச் சொற்களை அனுப்பி யுதவினர்கள். அவை *29—8—1955, 30—8—1955, 1—9—1955, 2—9—1955* ஆகிய நாட்களில் ஆட்சிச் சொல்லாக்கக் கழகத்தாரால் ஆராய்ந்து முடிவு செய்யப் பெற்றுச் சேர்க்கப்பெற்றன.

வெளியீட்டு விழா

ஆட்சிச்சொல் அகராதி அச்சிடப்பெற்று, திருநெல் வேலி இந்துக் கல்லூரியில் *5—12—1955*ல் கூடிய அறிஞர் பேரவையில் அரங்கேற்றப்பெற்றது. அவ்விழா விற்குத் தலைமை தாங்கியவர் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் **R. V. இராமன், I. A. S.,** அவர்கள். அதனைத் தொடங்கிவைத்தவர் தென் மாவட்டங்களின் கல்வி அதிகாரி **கோபால ஐயர்**, எம்.ஏ., எல்.டி., அவர்கள். திருநெல்வேலி மேற்கு மாவட்டக் கல்வி அதிகாரி **பால கிருட்டின முதலியார்**, பி. ஏ., எல். டி., அவர்கள் ஆட்சிச் சொற்களை வெளியிட்டுப் பேருரை நிகழ்த்தினர்கள். அச் சொற்களுக்குத் தகுந்த திருத்தங்கள் கூறுபவர் களிற் சிறந்த முதல் மூவருக்குப் பரிசுகள் வழங்கப் பெறும் என விளம்பரம் செய்யப் பெற்றது. இருபத்து மூன்று பெரியார் திருத்தங்கள் அனுப்பினர்கள்.

ஆட்சிச் சொற்களை அரசாங்கத்திற்கு
ஒப்படைப்பு விழா
சென்னை 21—12—1956.



இடமிருந்து:—இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, S. வேங்கடேசுவரன் I.C.S., தலைமையமைச்சர் காமராசனார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் T. M. நாராயணசாமி பிள்ளை, கல்வி அமைச்சர் C. சுப்பிரமணியம், காப்பு அமைச்சர் மீ. பக்தவத்சலம்.

(பக்கம் 19 பார்க்க)

ஆட்சிச் சொற்களை முதலாவது ஆக்கிய
தமிழ்ப்பெரும் புலவர்கள்



பேராசிரியர் ஆ. அருளப்பன்,
டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை.

(பக்கம் 16 பார்க்க)

சென்னை ஆட்சிச் சொல்லாக்கக் கழகம்



இடமிருந்து :—முதல் வரிசை—கோதண்டபாணி பிள்ளை, நெ. து. சுந்தரவடிவேலு, இரா. பி. சேதுப்பிள்ளை, S. வேங்கடேசுவரன், மா. அனந்த நாராயணன், R. V. கிருஃச்ண ஐயர், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை.

இரண்டாம் வரிசை—அ. முத்தையா, T. K. சங்கரவடிவேலுப் பிள்ளை, சொ. அமிர்தகணேச முதலியார், மு. அ. குற்றாலலிங்கம் பிள்ளை, N. விநாயகம். (பக்கம் 18 பார்க்க)

சென்னை ஆட்சிச்சொல்லாக்கம்

சங்க அமைச்சரவர்கள் சென்னைக்கு வந்து S. வேங்கடேசுவரன், I. C. S., அவர்கள், மா. அனந்த நாராயணன், I.C S., அவர்கள், T. K. சங்கரவடிவேலுப்பிள்ளை, I. A. S., அவர்கள், பேராசிரியர் இரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் முதலிய பெரியார்களோடு கலந்து பேசிச் சென்னையில் ஆட்சிச் சொற்களை ஆராய்ந்து முடிவுசெய்யும் கழகத்தை அமைக்கும் திட்டத்தை வகுத்துத் தெரிவிக்க, சங்கத் தொழிற் கழகம் 30—1—1956ல் சென்னை ஆட்சிச் சொல்லாக்கக் கழகத்தை அமைத்தது. அதன் தலைவர் S. வேங்கடேசுவரன், I. C. S., அவர்கள்.

சென்னை அரசாங்கம்

27—11—1954ல் நமது சங்கம் சென்னையில் வைத்து இப்பணி தொடங்கப் பெறும் என முழு ஆதரவு கேட்டு அரசாங்கத்திற்கு எழுதியது. பின் திருநெல்வேலியில் இப்பணி நடப்பதற்குப் போதுமான வாய்ப்பு இருப்பதை யறிந்து நமது சங்கம் 23—4—1955ல் சென்னை அரசாங்கத்திற்கு எழுதி முழு ஆதரவும் அருள வேண்டிக்கொண்டது.

திருநெல்வேலியில் கிழக்கு மாவட்டக் கல்வித் தலைவர் கி. வேங்கடசுப்பிரமணிய ஐயர், எம்.,ஏ.,எல்.டி., (அரசு ஆணை எண் 1317/55 நாள் 23—3—1955) அவர்களையும், இந்து அறநிலைய உதவி ஆணையாளர் ம. இரா. சண்முக சுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்., (அரசாணை எண் 391 நாள் 9-6-1955) அவர்களையும் ஆட்சிச் சொல்லாக்கக் கழகத்திற் கலந்து பணிபுரியுமாறு சென்னை அரசாங்கம் ஆணை அனுப்பி ஆதரித்தது. பின் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் வழியாக நமது ஆட்சிச் சொல்லாக்க நிலையை அறிந்து(எண் 2781154-11 நாள் 27-10-1955) வேண்டும் துணைபுரிய முன் வந்தது. அரசாங்கக் கருத்துக்கு இசைந்து பணிபுரிவதாக 26-11-1955ல் நமது சங்கம் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர்வழி அரசாங்கத்திற்கு மறுமொழி அனுப்பியது.

4-2-1956ல் சங்கம் எழுதிய விண்ணப்பத்தின் பயனாகச் சென்னை அரசாங்கம் தமிழகத்திலுள்ள மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் யாவருக்கும் ஆட்சிச் சொற்களில் இவ்விரண்டு படிகள் அனுப்பி ஆராய்ந்து நல்ல திருத்தங்கள் கண்டு சங்க அமைச்சரவர்கட்கு அனுப்பும்படி (எண் 799/56-1 நாள் 11-2-56ல்) ஆணை அனுப்பியது. சென்னை, செங்கற்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், நீலகிரி, கோயமுத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பன்னிரண்டு மாவட்ட ஆட்சித் தலைவரும் ஆங்காங்கே உட்குழுக்கள் அமைத்து ஆராய்ந்து திருத்தங்களை அனுப்பி உதவினார்கள்.

சென்னை வருவாய்த் துறை (Board of Revenue) அலுவலகத்தில் சொல்லாக்கக் கூட்டங்கள் நடத்துவதற்கு 21-2-56ல் அரசாங்கம் இசைவாணை அனுப்பியதோடு 27-2-56 எண் 773 ஆணையால் சங்கத்திற்கு இப்பணிக்காக ஓராயிரம் ரூபா அடையாள நன்கொடை வழங்கியது; பின் 22-6-56ல் எண் 2207 ஆணையால் சங்கம் அமைத்துள்ள சென்னை ஆட்சிச் சொற் கழகத்தை ஏற்றுக்கொண்டது.

சென்னைக் கழகப் பணி

சென்னை ஆட்சிச் சொல்லாக்கக் கழகம் முதன் முதலாகச் சென்னைச் சேப்பாக்கம் வருவாய்த்துறை அலுவலகத்தில், **S. வெங்கடேசுவரன், I. C. S.,** அவர்கள் தலைமையில் 16—5—1956ல் கூடிச் சொற்களை ஆராய்ந்தது 17–5–'56ல் நடைபெற்ற கூட்டத்தில் அந்த இரண்டு நாட்களிலும் ஆராய்ந்து கண்ட முறையில் சொற்களை ஆராய்ந்து முடிவு கூறும்படி **மா. அனந்தநாராயணன், I.C.S.,** அவர்கள் தலைமையில் **R. V.** கிருட்டின ஐயரவர்கள், **K.** கோதண்டபாணி பிள்ளையவர்கள், அமைச்சரவர்கள் ஆகிய மூவரையும் உறுப்பினராகக் கொண்ட உட்குழு அமைக்கப்பெற்றது.

உட்குழுக் கூட்டங்கள் 16-7-1956ல் தொடங்கிச் சட்டக் கல்லூரியில் நடைபெற்றன. 27-7-'56-ல் உட்குழு தனது பணியை நிறைவு செய்து அறிக்கையுடன் சொற்களை ஆட்சிச் சொற் கழகத்திற்கு அனுப்பி வைத்தது.

16–8–56ல் ஆட்சிச் சொல்லாக்கக் கழகம் வருவாய்த்துறை அலுவலகத்திற் கூடி உட்குழுவினர் அறிக்கையை ஆராய்ந்து ஏற்றுக்கொண்டது. 21-8-'56ல் தலைவர் வேங்கடேசுவரனவர்கள் மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் **இரா. பி. சேதுப் பிள்ளை**யவர்கள் (தலைவர்), **T. K.** சங்கர வடிவேலுப் பிள்ளையவர்கள், சொக்க. அமுதகணேச முதலியாரவர்கள், **K.** கோதண்டபாணி பிள்ளையவர்கள், அமைச்சரவர்கள் ஆகிய ஐவர் குழு, சொல் திறன் ஆராய்வதற்காக அமைக்கப் பெற்றது.

இதன் கூட்டங்கள் 8–9–1956ல் தொடங்கிப் பல்கலைக் கழகத்திலும், செஞ்சிலுவைச் சங்கத்திலும், கோட்டை அரசாங்க அலுவலகத்திலும், பெரும்பகுதி **T. K.** சங்கர வடிவேலுப் பிள்ளையவர்கள் மாளிகையிலும் நடைபெற்றன. திட்டமான சொற்கள் அமைக்கப் பெற்றன. 14–10–'56ல் இந்த உட்குழுப் பணி நிறைவு பெற்றது.

ஆட்சிக்கு இன்றியமையாது வேண்டும் சட்டக்கலைச் சொற்களைப் பொறுக்கித் தரும்படி **மு. அ. குற்றாலலிங்கம் பிள்ளை**யவர்கள் கேட்டுக்கொள்ளப் பெற்றார்கள். அதற்கு உதவியாக மா. அனந்த நாராயணனவர்கள் தாம் திரட்டி வைத்திருந்த மூவாயிரத்திற்கு மேற்பட்ட சட்டக்கலைச் சொற்களைத் தந்து உதவினார்கள். எண்ணூறு சொற்கள்வரை பொறுக்கிக் குற்றாலலிங்கம் பிள்ளையவர்கள் அமைச்சரவர்களுடன் 31-8-'56, 1-9-'56, 2-9-'56 ஆகிய மூன்று நாட்களிலும் ஆராய்ந்து முடிவுசெய்து சென்னைக் கழகத்திற்கு அனுப்பி யுதவினார்கள். அச்சொற்களை மா. அனந்த நாராயணனவர்கள், **T. K.** சங்கர வடிவேலுப் பிள்ளையவர்கள், **R. V.** கிருட்டின ஐயரவர்கள் ஆகிய மூவரும் திருந்த அமைத்துத் தந்தார்கள்.

ஆட்சிச் சொற் கழகம் 21–10–'56ல் கூடி இரண்டு உட்குழுவுகளும் திருந்த அமைத்துத் தந்த சொற்களை ஆராய்ந்து ஏற்றுக்கொண்டது.

ஒப்படைப்பு விழா

(21-12-1956 வெள்ளிக்கிழமை)

ஆட்சிச் சொற்கழகம் ஆராய்ந்து முடித்து வைத்துள்ள சொற்களை அரசாங்கத்திடம் ஒப்புவிப்பதற்குச்

ஆசிரியர் கல்லூரிக் கலைச்சொல்லாக்கக் கழகம்



இடமிருந்து :—A.E. சுப்பிரமணியம், சொ. அமுதகணேச முதலியார், S. பழநிச்சாமி, நெ. து. சுந்தரவடிவேலு, தலைவர், மு. இரா. பெருமாள் முதலியார், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, நா. சாமி. தையல் பாகம்.

நிற்போர் :—இடமிருந்து—P. S. தாவீது, வி. கிருட்டினமூர்த்தி, N. பார்த்தசாரதி, A. பன்னீர்செல்வம், C. சீனிவாசன், R. M. K. காதர், R. திருஞானசம்பந்தம், T. கௌரிநாதன், P. தங்கவேலு:

(பக்கம் 19 பார்க்க)

தமிழ் நாடு சித்தவைத்திய மாநாடு
29—9—1957.

முதல் வரிசை :—இடமிருந்து R. இராமசுப்பு ரெட்டியார், மந்திரி மாணிக்கவேலு நாயகர், கருமுத்து தியாகராச செட்டியார், கசபதி நாயகர், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, சங்கர ரெட்டியார், வி. பலராமையா.

இரண்டாம் வரிசை :—தாணுப் பிள்ளை, சி. ச. அருணசலம் பிள்ளை, சு. இராமசாமிக் கோனர், முதலியோர். (பக்கம் 24 பார்க்க)

சென்னையில் இராசாசி மண்டபத்தில் ஒரு பேரவை கூடிற்று. அதன் தலைவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள், முதலமைச்சர் கே. காமராசனார் அவர்கள் தங்கள் துணை வர்களாகிய பாதுகாவல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள், மராமத்து அமைச்சர் சேதுபதியவர்கள் ஆகிய மூவருடனும் வந்திருந்து, ஆட்சிச் சொற் கழகத் தலைவர் சு. வேங்கடேசுவரன், I.C.S., அவர்கள் ஒப்படைக்க அரசாங்கத்தின் சார்பாக ஆட்சிச் சொற்களை ஏற்றுக் கொண்டார்கள்.

தமிழ் ஆட்சி மொழியாகியது

மறுநாள் 22–12–1956ல் சென்னைச் சட்டசபையில் **தமிழாட்சிச் சட்டம்** நிறைவேறியது. நமது ஆட்சிச் சொற்களை அச்சிட்டுப் பல துறைகட்கும் அனுப்பி நமது சென்னை அரசாங்கம் தாய்மொழியாம் தமிழ் மொழியிலே நாட்டாட்சியை நடாத்தி வருகிறது.

8. ஆசிரியர் கல்லூரிச் சொல்லாக்கம்

தோற்றுவாய்

2-2-1956ல் நடைபெற்ற ஆட்சிச்சொல் ஒப்படைப்பு விழாவிற் படித்த அறிக்கையின் இறுதியில் பின்வரும் பகுதி காணப் பெறுகிறது: அது, "முன் உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழி வழியாகக் கல்வி நடைபெறுவதற்கு நமது சங்கம் இடைவிடாது முயன்று கலைச் சொற்களை அமைத்துத் தந்ததுபோலவே இனி, கல்லூரிக் கல்விக்கும் துணை புரிய முன் நின்று பணி புரியும் கடமையும் உடையது. அரசாங்கமும் பல்கலைக் கழகங்களும் இந்நிலை காணத் துணைபுரியும் என நமது சங்கம் எதிர்நோக்கி நிற்கின்றது" என்பது.

இம் முடிவினுக் கிணங்க நமது சங்கம் பின்வருமாறு எண்ணியது : "ஆசிரியர் கல்லூரிகளிற் பயிற்சி பெறும், பி.ஏ., எம்.ஏ., பட்டம் பெற்றவர் அனைவரும் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியராக அமர்ந்து நம் தாய்மொழியாகிய தமிழிலேதானே பாடங்களைக் கற்பிக்கின்றனர் ; ஆதலால், அவர்களுக்குப் பயிற்சிக் கல்லூரிகளின் பாடங்களெல்லாம் தமிழிற் கற்பிக்கப் பெறுவதுதானே நன்மை தரும் முறையாகும்." இங்ஙனம் எண்ணிய சங்கத்திற்குப் பெருந் துணையாயினர் சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி முதல்வர் **மு. இராம. பெருமாள் முதலியார்**, எம்.ஏ., எல்.டி., அவர்கள் ; கழகத் தலைமை தாங்கி நடத்தித்தரச் சென்னை மாநிலப் பொதுக்கல்வி இயக்குநர் **நெ. து. சுந்தர வடிவேலு**, எம்.ஏ., எல்.டி., அவர்களும் இசைவு தந்தார்கள். இவர்களுடைய துணையைப் பற்றிக்கொண்டு நம் தமிழ்ச் சங்கம் 15–3–57ல் ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொல்லாக்கக் கழகத்தை அமைத்தது.

சொற்கள் உருவாயின

அதன் உறுப்பினர் நம் நாட்டிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் முதல்வர்களும் பல பேராசிரியர்களும் ஆவர். சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரிப் பேராசிரி

யரனைவரும் பேருதவி புரிந்தனர். இதிற் பணியாற்றும் அரசியல் அலுவலர்களுக்குச் சென்னை அ ர சா ங் க ம் 21—5—1957-ல் எண் 241 ஆணையால் அனுமதியருளி யது. இக்கழகம் 21—3—1957—ல் தொடங்கி நாடோறும் சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியிற் கூடி 31—3—1957 வரை பணிபுரிந்தது. அதன் விளைவாக அமைந்தது "ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொற்கள்" என்னும் நூல். அந்நூல் அச்சிடப் பெற்றுத் தற்கால மாக வெளியிடப்பெற்றது.

தற்கால வெளியீட்டு விழா

தற்கால வெளியீட்டுவிழா 25—1—1958-ல் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் புனிதயோவான் கல்லூரி முதல்வர் **வேதசிரோமணி** அவர்களால் தமிழ்க்கொடி யேற்றப்பெற்று, புனித சவேரியர் கல்லூரி முதல்வர் **சூசை அடிகளார்** தலைமைதாங்க நடைபெற்றது. இந்துக் கல்லூரி முதல்வர் **க. ச. கணபதி பிள்ளை** யவர்கள் நூலை வெளியிட்டார்கள். வ. உ. சி. ஆசிரியர் கல்லூரி முதல்வர் **கி. அர. அப்புள்ளாச்சாரி**யாரவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். அந்நூல் ஆசிரியர் கல்லூரிகள் அனைத்திற்கும் அனுப்பப்பெற்றது; நல்ல திருத்தங்கள் தரும் முதல் இருவருக்குப் பரிசு வழங்கப் பெறும் என்ற விளம்பரமும் குறிக்கப்பெற்றது.

உறுதியாக்கப் பெற்றமை

ஆசிரியர் கல்லூரிகள் யாவும் திருத்தங்கள் அனுப்பின; அவற்றை வைத்துக்கொண்டு சொற்களை முடிவு செய்யும் பொருட்டுச் சொல்லாக்கக் கழகம் 26-3-1958, 27—3—'58; 10—6—'58, 11—6—'58, 12—6—'58, 13—6—'58, 14—6—'58; 12—11—'58, 13-11-58, 15—11—1958, 24—12—1958, ஆகிய நாட்களில் கூடி நன்கு ஆராய்ந்து முடிவு செய்ததுடன் ஆட்சிச் சொற்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து முடிவு செய்ய ஓர் உட்கழகத்தையும் அமைத்துத் பரிசுக்குரியாரையும் தீர்மானித்தது. மாநிலக் கல்வி இயக்குநர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்களும், மு. இராம. பெருமாள் முதலியாரவர்களும், கி. அர. அப்புள்ளாச்சாரியாரவர்களும் செய்த பெருந் துணை அருந்துணையாகும்.

உட்கழகம் 25—12—1958, 26—12—'58, 27—12—'58, 29—12—'58 ஆகிய நாட்களிற் கூடி ஒவ்வொரு நாளும் பல மணி நேரங்கள் பணியாற்றிச் சொற்களை நிறைவு செய்தது.

வெளியீட்டு விழா

அங்ஙனம் அமைந்த சொற்கள் அடங்கிய **ஆசிரியர் கல்லூரிச் சொற்கள்** என்ற நூல் 4—2—1959 புதன் கிழமை சென்னை இராசாசி மண்டபத்தில் கல்வி அமைச்சர் **சி. சுப்பிரமணியம்** அவர்களால் வெளியிடப் பெற்றது. ஆளுநர் **பி. விட்ணுராம் மேதி** அவர்கள் தலைமை தாங்கினார்கள். உள்நாட்டு அமைச்சர் **மீ. பக்தவத்சலம்** அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். தொடர்ந்து பரிசளிப்பு விழா நடைபெற்றது.

பரிசளிப்பு விழா

ஆட்சிச் சொற்கள்:

பின் வருகின்ற பெரியார்களுக்குப் பரிசாகக் செப்புப் பட்டயம் வழங்கப் பெற்றன:—

சிறப்பு

அமைச்சரவர்களுடன் இருந்து ஆட்சிச் சொல்லாக்கத்துக்கு எல்லாத் துணையும் புரிந்த பேராசிரியர் ஆ. அருளப்பன் அவர்களுக்குத் "**தமிழ்ப்பெரும் புலவர்**" என்ற பட்டம் வழங்கப்பெற்றது.

முதற் பரிசு

ஆர். வி. கிருட்டின ஐயர் அவர்கள்,
(சென்னைச் சட்டசபை முன்னைச்செயலாளர்.)

இரண்டாம் பரிசு

பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள்,
(அண்ணமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்.)

K. S. சம்புநாதன் அவர்கள்,
(ஆங்கில அரசாங்கச் செய்திப்பணி, புதுதில்லி.)

ஆசிரியர் சொற்கள்

பின்வரும் கல்லூரிகளுக்குப் பரிசாகச் செப்புப் பட்டயம் வழங்கப்பெற்றது.

சிறப்பு

அடிப்படைப் பணிகள் முதல் பணி நிறைவு பெறும்வரை பெருந்துணை புரிந்த சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரிக்குப் பாராட்டுப் பரிசு வழங்கப் பெற்றது.

முதற் பரிசு

திருப்பராய்த்துறை விவேகானந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.

இரண்டாம் பரிசு

தூத்துக்குடி வ. உ. சி. ஆசிரியர் கல்லூரி.

9. சாரல் மாநாடு

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் சாரற் காலத்திலே திருக்குற்றாலத்தில் வந்து சேரும் மக்களுக்குப் பயன் தருமாறு அங்கே திருக் குற்றால நாதர் கோவிற் சார்பில் ஐந்து மாநாடுகளை நடத்தியிருக்கிறது. அவை **சாரல் மாநாடு** என்று பெயர் பெறும்.

முதலாவது மாநாடு *24-7-1942* வெள்ளி, *25-7-1942* சனி ஆகிய இரண்டு நாட்களிலும் செந்தமிழ்ப்புரவலர் **கோ. ம. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள்** தலைமையில் நடைபெற்றது. இவர்களே இரண்டாவது மாநாட்டுக்கும் தலைவர்.

இரண்டாவது மாநாடு *27-8-1944* ஞாயிறு, *28-8-'44* திங்கள் ஆகிய இரண்டு நாட்களிலும் நடைபெற்றது. அதனைத் தொடங்கிவைத்தவர் மாவட்டக் கழகத்தலைவர் இராவு பகதூர் **இ. சி. ஈசுவரன் பிள்ளையவர்கள்**; கொடியேற்றியவர் **T. K. சிதம்பரநாத முதலியார்** அவர்கள்.

மூன்ருவது மாநாடு *12-8-1945* ஞாயிறன்று இந்து அறநிலையக் காப்புக் கழகத் தலைவர் இராவுபகதூர்

T. M. சின்னையா பிள்ளையவர்கள் தலைமையிலும் 15, 16-9-1945 சனி, ஞாயிறுகளில் T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது. கொடியேற்றியவர் பேராசிரியர் நாவலர் சு. சோமசுந்தர பாரதியார் அவர்கள்; தொடங்கிவைத்தவர் நீதிபதி T. S. குற்றாலலிங்கம் பிள்ளையவர்கள்.

நான்காவது மாநாடு 28-7-1946 ஞாயிறன்று மராமத்து அமைச்சர் மீ. பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஐந்தாவது சாரல் மாநாடு 3-8-1948 செவ்வாய், 4-8-1948 புதன் ஆகிய இரண்டு நாட்களிலும் T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தலைமை தாங்க நடந்தேறியது.

இம் மாநாடுகளில் கோவில் ஆட்சித் தரும கருத்தர்களே வரவேற்புத் தலைவர்களாக இருந்தார்கள். ஒவ்வொரு மாநாட்டிலும் பெரியார் பலர் விரிவுரை யாற்றிப் பேரவையினரை மகிழ்வித்தார்கள்.

10. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத் தமிழ்க் கல்லூரி

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் "தமிழ்க் கல்லூரி" ஒன்றினைத் திருநெல்வேலியில் நடத்தி வந்தது. அதன் ஆட்சிக் கழகத்தின் முதற் கூட்டம் 5-7-1946 ல் நடைபெற்றது. ஆட்சிக் கழகத் தலைவர் தி. மு. நெல்லையப்ப பிள்ளை அவர்கள். கல்லூரி 8-8-1946 திங்கட்கிழமை யன்று, சென்னை மாகாண முதல் அமைச்சராகவும் பின் ஒரிசா ஆளுநராகவும் இருந்த பூ. ச. குமாரசாமி ராசா அவர்களால் தொடங்கிவைக்கப்பெற்றது. இது 1946-47, 1947-48, 1948-49, 1949-50 ஆகிய நான்காண்டுகள் நடைபெற்றது. இதன் தலைவர் இராவு சாகிபு J. சக்கரபாணிநம்பியார் எம். ஏ. பி.எல். அவர்கள்.

மூன்ருவது படிவம் (III Form) முடியப் படித்து நான்கு, ஐந்து, ஆறு ஆகிய படிவங்க (IV, V, VI Forms) ளையே பார்த்தறியாத மாணவருங்கூட அதிற் சேர்த்துக் கொள்ளப் பெற்ருர்கள். ஒரே ஓராண்டு மட்டும் கற்றவுடன் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்திய 'மெட்ரிகுலேசன்' ஆங்கிலமும், இண்டர்மீடியேட்டுத் தமிழும் (பாகம் 2) ஆகிய இரண்டு தேர்வுகளிலும் தேறி இண்டர்மீடியேட்டு வகுப்பில் III D தொகுதியிற் சேர்த்துக்கொள்ளப் பெற்ருர்கள். அவர்களிற் சிலர் அவ்வகுப்பிலும் தேறி பி. ஏ.ப் பட்டம் பெற்றிருக்கிருர்கள். தமிழ் மட்டும் கற்றவர்கள் பலர் பிற கல்லூரிகளிற் சேர்ந்து வித்துவான் பட்டம் பெற்றிருக்கிருர்கள்.

இதனல் IV, V, VI படிவங்களில் மூன்ருண்டு பெறும் ஆங்கில அறிவையும், அதன் மேல் இண்டர்மீடியேட்டு வகுப்பில் ஈராண்டு ஆக ஐந்தாண்டு பெறும் தமிழ் அறிவையும் ஓராண்டிலேயே படித்துப் தேறுவது அரிதன்று என்பது தெளிவாக்கப் பெற்றது.

திருமுருகாற்றுப் படைக்குழு



இடமிருந்து :—ஆ. அருளப்பன், இ. மு. சுப்பிரமணியபிள்ளை, சு. இராமசாமிக் கோனர், தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை, பு. சி. புன்னைவனநாத முதலியார், வே. மாணிக்கவாசகம் பிள்ளை.

(பக்கம் 25 பார்க்க)

திருமுருகாற்றுப் படைக்குழு
(புலவர்கள் ஆயும்போது)



இடமிருந்து :—ஆ. அருளப்பன், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, வே. மாணிக்கவாசகம் பிள்ளை, ஆ. சேபரத்தினம்.

(பக்கம் 25 பார்க்க)

அறநிலையக் காப்புக் கழகத்தின் பெருந்துணை

அறநிலையக்காப்புக் கழகத் தலைவர் இராவுபகதூர் **T. M. சின்னையாப் பிள்ளை**யவர்கள் பின்வரும் சுற்றுணையை ஆண்டுக்கு ரூபா மூவாயிரமும் அதன் மேலும் வருவாயுடைய கோவில்கள், மடங்கள், கட்டளைகளின் தருமகர்த்தர்களுக்கு 4-2-1946 ல் அனுப்பியுதவினார்கள்.

Tele. "**Religious**"

Office of the Board of Commissioners
for Hindu Religious Endowments,
Cathedral Post, Madras.

Sub: **Contribution to the Madras Presidency Tamil Sangam, Tirunelvely.**

CIRCULAR No. 20 (GL)/46 Dated 4—2—1946

The Secretary, Madras Presidency Tamil Sangam, has appealed to the Board for monetary contribution from temples and maths in Tamil districts. The Board has considered the aim and work of the Sangam for advancement of Tamil education, and is of opinion that the object to which the contribution is asked for is a laudable and deserving one and that donations according to the availability of funds may be made to the Sangam by the trustees concerned. Provision for which donations may be included in the annual budget of the insitutions under the head "Charities". The authorities of the temples and maths may make contribution to the above Sangam after obtaining the previous sanction of the Board.

(Sd.) T. M. CHINNAIYA PILLAI
President. 4—2—1946.

To

The Trustees of religious institutions getting an income of Rs. 3000 and above through the assistant Commissioners.

சங்கம் இது கொண்டு பெரும் பொருளைச் சேர்த்திருக்கலாம். ஆனல் சங்கம் தமிழ்க்கல்லூரியின் தேவையை மட்டும் காப்புக் கழகத் தலைவரவர்களுக்குத் தெரிவித்து வந்தது. அத்தேவையைச் சில கோவில்களின் நன்கொடையால் நிரப்பி உதவினார்கள் தலைவரவர்கள். காரணம், பெரும் பொருள் சேர்ந்தால் பெருங்கேடு சூழும் என்னும் உண்மையினைச் சங்கம் உணர்ந்திருப்பதுதான்.

11. சைவ வைணவ சமய விரிவுரையாளர் பயிற்சிக் கல்லூரி

இக்கல்லூரி திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் வசந்த மண்டபத்தில் 1-7-48 முதல் 30-9-48 முடிய மூன்று மாதங்கள் நடைபெற்றது. சமயப் பொறையுடன் ஒழுக்க சீலர்களாக மக்கள் வாழும்படி விரிவுரையாற்றுமாறு பயிற்சி அளித்துத் தேர்வு பெற்றோரைக் கோவில்களில் நல்ல சம்பளம் தந்து அமர்த்திப் பணியாற்றும்படி செய்வதே இப்பயிற்சிக் கல்லூரியின் நோக்கம். நமது சங்கத்தின் தூண்டுதலினாலேயே அரசாங்க ஆணைப்படி அறநிலையக் காப்புக் கழகத்தார் இதனை நடத்தினார்கள்.

இம்முறை பின்பற்றப்பட்டால் நாடு மிக்க நலம் பெறும் என்ற உண்மையைச் சங்கம் அரசாங்கத்திற்கு எடுத்து மொழிகின்றது.

12. சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றம்

தமிழ் நாடு சித்த வைத்திய சங்கத்துடன் சேர்ந்து நமது சங்கம் திருநெல்வேலியில் 29-9-57 ஞாயிறன்று **தமிழ் நாடு சித்தவைத்திய மாநாட்டினை கருமுத்து தியாகராயசெட்டியார்** அவர்கள் தலைமையில் நடத்தியது. அதனைத் தொடங்கிவைத்தவர் அரசியல் வைத்திய அமைச்சர் **M. மாணிக்கவேலு நாயக்கர்** அவர்கள்.

அதன் விளைவாகப் பண்புளியில் ஒரு **சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றம்** தொடங்கி வெற்றியுடன் நடைபெற்று வருகிறது. திருமலைக்குமரன் திருக்கோவிலின் முழு ஆதரவிலேயே அது வளர்ந்து வருகிறது. அறநிலைய ஆணையாளர் **உத்தண்டராம பிள்ளையவர்கள்** வைத்திய அமைச்சர் **மாணிக்கவேலு நாயக்கர்** அவர்களையும், அறநிலைய அமைச்சர் **மீ. பக்தவத்சலம்** அவர்களையும் அழைத்து வந்து இம் மன்றத்தைத் தொடங்கிவைத்தார்கள்.

திருவாசகப்பணி ஆட்சியாளரும் பணியாற்றும் புலவரும்



இருப்போர் :— இடமிருந்து :—டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை (அமைச்சரும் புலவரும்), **K.** வேங்கட சுப்பிரமணியம் எம்.ஏ.,எல்.டி., (தென் நெல்லை மாவட்டக் கல்வித் தலைவர்), இர. பசுபதி, எம்.ஏ., **I. A. S.,** (மாவட்ட ஆட்சித் தலைவர்), சு. இராமசாமிக்கோனார், பி. ஏ., பி. எல்., (தலைவர்), டாக்டர் தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை (துணைத் தலைவரும் புலவரும்), பேராசிரியர் பு. சி. புன்னைவனநாத முதலியார் (புலவர்), ப. தி. சுப்பையாப் பிள்ளை, பி.ஏ., பி.எல்., (பொருளாளர்)

நிற்போர் :— இடமிருந்து :—கு. ஆ. சுவாமிநாதன், எம். ஏ., எல். டி., (தென் நெல்லை மாவட்டக் கல்வித் தலைவருக்குத் துணைவர்), பேராசிரியர் ஆ. அருளப்பன், பி. ஏ., (புலவர்!, வித்துவான் வே. மாணிக்க வாசகம் பிள்ளை (புலவர்).

(பக்கம் 25 பார்க்க)

சங்கம் நிறுவிய துங்கர்

சங்கத்தை நிறுவிய
சென்னை மாகாணத் தமிழர்
முதலாவது மாநாட்டு
அமைச்சர்

பெருநாவலர்
பு. சி. புன்னைவனநாத முதலியார்
(தொடக்க முதல் சங்கத் தொழிற்
கழக உறுப்பினர்)

கணியர், டாக்டர்
இ. மு. சுப்பிரமணிய பிள்ளை
(தொடக்க முதல் சங்க
அமைச்சர்)

(பக்கம் 5 பார்க்க)

13. சங்கத்தின் சிறந்த பணிகள்

தமிழ்த்தாய்

தமிழ்த்தாய் என்ற முத்திங்கள் வெளியீடு முதன் மூன்றுண்டுகள் வெற்றியாக வெளிவந்தது. இது விரைவில் மறுபடி தொடங்கப்பெறும்.

அகராதிகள்

ஆங்கிலத் தமிழ் அகராதி ஒன்றும் தமிழுக்குத் தமிழ் அகராதி ஒன்றும் சங்கம் ஆக்கியிருக்கிறது. இவை விரைவில் அச்சிடப்பெறும்.

எழுத்து மாற்றத்தைத் தடை செய்தது

*1942-43*ல் பலர் தீவிரமாக முயன்று கிரந்த எழுத்துக்களைத் தமிழ் அரிச்சுவடியிற் புகுத்த முயன்று அரசாங்கத்தினையும் தூண்டியதை நமது சங்கம் பெருமுயற்சி கொண்டு நிறுத்தியது.

சென்னை மாநகராட்சி மன்றம்

இதன் முதல்வர் (மேயர்) '57ல் சென்னை மாநகராட்சி மன்றக் கூட்ட நடைமுறைச் சட்டதிட்டங்களைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதித் தருமாறு நம் சங்கத்தை வேண்டிக்கொண்டார். அங்ஙனமே நம் சங்கம் அதற்கென ஓர் உட்குழுவினை அமைத்து மொழி பெயர்த்து மாநகராட்சி மன்றத்திற்கு உதவியது.

நூலாக்கம்

திருவாசகம், திருக்குறள், நாலடியார் ஆகிய மூன்று நூல்களுக்கும் சொல்லடைவு பொருளடைவுடன் தெளிபொருள் விளக்கமும் ஆக்கி வெளியிட ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்து நம் சங்கம் பணி தொடங்கியிருக்கிறது. திருவாசகத்திற்குச் சொல்லடைவு நிரம்பித் தெளிபொருள் விளக்கம் ஆக்கப்பெற்று வருகிறது. இந்தப் பணிக்கு இந்திய அரசு நன்கொடை அருளி வருகிறது.

இப்பணியை மேற்பார்ப்பதற்குச் சங்கத் தலைவர், துணைத் தலைவர், அமைச்சர், பொருளாளர் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் (District Collector), திருநெல்வேலி மாவட்டத் தெற்கு, நடு ஆகிய பகுதிகளின் கல்வி அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய ஆட்சிக்குழு அமைக்கப் பெற்றுள்ளது.

வெள்ளி விழா

நமது சங்கம் தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகள் நிரம்பி விட்டபடியால் இப்போது **வெள்ளி விழா** நடைபெறுகின்றது. இதன் நினைவு மலரென இவ்வரலாறு வெளிவருகின்றது.

திருமுருகாற்றுப்படை சொல்லடைவு பொருளடைவுகளுடன் தெளிபொருள் விளக்கமும் அமைந்து வெளிவருகின்றது. இதனை ஆக்கும் குழுவினர் பற்றிய விவரங்களைப் படங்களிற் காண்க.

மேலும் இருபதாவது நூற்றுண்டுத் தமிழ் வரலாறும் ஆக்கி வெளியிடப் பெறும்.

14. சென்னை அரசுத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்

26–1–1958ல் சென்னை அரசாங்கக் கல்வி அமைச்சர் **சி. சுப்பிரமணியம்** அவர்கள் தலைமையில் ஒரு தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தைத் தொடங்கிச் சிறந்த பணியாற்றி வருகிறது. அதில் நம் சங்கத்தின் சார்பாகச் சங்க அமைச்சர் டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் உறுப்பினராக இருந்து வருகிறார்கள். மேலும் நம் சங்கத் தொழிற் கழக உறுப்பினராகிய நீதிபதி மா. அனந்தநாராயணன் அவர்களும், டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்களும், சங்க உறுப்பினராகிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்களும், முன்னைக் கல்வி அமைச்சர் அவிநாசிலிங்கம் செட்டியாரவர்களும், பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியாரவர்களும், இலங்கைத் தனிநாயக அடிகளும் இம்மன்ற உறுப்பினராக இருக்கின்றனர்.

15. சங்கத் தலைவர் முதலியோர்

இந்த இருபத்தைந்தாண்டுகளாகத் தலைவர், துணைத் தலைவர், அமைச்சர், துணை அமைச்சர், பொருளாளர், தொழிற் கழக உறுப்பினராக இருந்தவர்களும் அவர்கள் இருந்த காலமும் பின்வருமாறு :

1. தலைவர் :

பல்கலைப் புலவர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் 11-6-1934—9-9-1938

சித்தாந்தப் பேராசிரியர் மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் 10-9-1938—23-4-43

நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் 24-4-43—27-8-43

செந்தமிழ்ப் புரவலர் கோ. ம. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள் 28-8-43—30-8-46

டாக்டர் ப. கு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் 31-8-46—1-9-48

திவான்பகதூர் பி. ஆவுடையப்ப பிள்ளையவர்கள் 2-9-48—10-11-49

டி. எம். நெல்லையப்ப பிள்ளையவர்கள் 11-11-49—18-9-52

மு. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் 19-9-52—29-1-55

சு. இராமசாமிக் கோனரவர்கள் 30-1-55

2. துணைத்தலைவர் :

செ. தெ. நாயகம் அவர்கள் 11-6-34—1-10-37

சங்கரநாராயண பிள்ளையனவர்கள் 2-10-37—9-9-38

சென்னை அரசுத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தில்
சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்

வலப்புறம் கீழிருந்து வரிசையாக :—தனிநாயக அடிகள், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, மா. அனந்தநாராயணன், இரா. பி. சேதுப் பிள்ளை, மேல் தலைப்பில் :—T M. நாராயணசாமி பிள்ளை, இடப்புற நடுவில் :-T.S. அவிநாசிலிங்கம் செட்டியார் முதலியோர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க உறுப்பினர்.
மன்றத் தலைவர் சி. சுப்பிரமணியம்

(பக்கம் 26 பார்க்க)

சைவ வைணவ விரிவுரையாளர் பயிற்சிக் கல்லூரி
தொடக்க விழா 1—7—48 (வசந்த மண்டபம்)



வீற்றிருப்போர் :—வா. சீனிவாச ஐயங்கார், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, T. M. சின்னையாப் பிள்ளை, இரா பி. சேதுப் பிள்ளை, கே. ஆறுமுக நாவலர்.

நிற்பவர் :—பயிற்சி மாணவர். (பக்கம் 24 பார்க்க)

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத் தமிழ்க் கல்லூரி
(1946—1950)



இருப்போர் :—இடமிருந்து நெ. நடராச பிள்ளை, பி. ஏ., எல். டி.,
இலக்குவனர், எம். ஓ. எல்., வித்துவான் சேது ரகுநாதன்,
T. .V ஆறுமுகம் பிள்ளை, பி. ஏ., எல். டி.

நிற்போர் :—கல்லூரி மாணவர். (பக்கம் 22 பார்க்க)

பேராசிரியர் அ. சீனிவாசராகவனவர்கள் 10-9-38—13-9-41

நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் 14-9-41—27-8-43

டாக்டர் ப. கு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் 28-8-43—30-8-46

மேடைதளவாய் குமாரசாமி முதலியாரவர்கள் 31-8-46—18-9-52

சு. இராமசாமிக் கோனரவர்கள் 19-9-52—29-1-55

டாக்டர், பேராசிரியர் இரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் 30-1-55—8-2-58

இ. அ. சிதம்பரம் பிள்ளையவர்கள் 9-2-58—7-3-59

டாக்டர் தி. இரா. அண்ணாமலைப் பிள்ளையவர்கள் 8-3-59

3. **அமைச்சர் :**

டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் 11-6-34

4. **பொருளாளர் :**

மு. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் 11-6-34—3-4-42

டி. ஆர். கோமதி நாயகம் பிள்ளையவர்கள் 4-4-42 27-8-43

இராம. கனகசபாபதி பிள்ளையவர்கள் 28-8-'43—6-9-'47

ப. தி. சுப்பையா பிள்ளையவர்கள் 7-9-'47

5. **துணை அமைச்சர் :**

இராம. கனகசபாபதி பிள்ளையவர்கள் 11-11-49

6. **தொழிற் கழக உறுப்பினர்**

(எண் சங்க ஆண்டினை உணர்த்தும்)

செந்தமிழ்ப் புரவலர் த. வெ. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் 1.

தூ. க. கந்தசாமி முதலியாரவர்கள் 1

ஆ. அருள் தங்கையா அவர்கள் 1, 2.

பெருநாவலர் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள், 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 16, 17, 18, 19, 20. 21, 22, 23, 24, 25.

T. M. சங்கரலிங்கம் பிள்ளையவர்கள் 1, 2.

T. V. நீலகண்டப் பிள்ளையவர்கள் 1, 2.

சித்தாந்தப் பேராசிரியர் மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் 2, 3.

பேராசிரியர் அ. சீனிவாசராகவனவர்கள் 2, 3,6.

அப்துல் கஃபூரவர்கள் 3, 4,

பேராசிரியர் க. ச. கணபதி பிள்ளையவர்கள் 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18.

பேராசிரியர் கு. அருணசலக் கவுண்டரவர்கள் 4, 5, 15, 18, 19.

சங்கரநாராயண பிள்ளையனவர்கள் 4, 5.

S. R. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் 4, 5, 6.

பேராசிரியர் அ. முத்தையா அவர்கள் 6, 7, 20, 21, 22. 23, 24, 25.

டாக்டர் ப. கு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் 7, 8, 14.
T. R. கோமதிநாயகம் பிள்ளையவர்கள் 7.
மு. சுப்பிரமணிய செட்டியாரவர்கள் 8, 9, 10, 11, 12, 15, 16, 17.
சு. சுடலைமுத்துப் பிள்ளையவர்கள் 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25.
இராம. கனகசபாபதி பிள்ளை 8, 13, 14.
மு. சண்முகம் பிள்ளையவர்கள் 9.
V. M. கல்யாணசுந்தரம் பிள்ளையவர்கள் 10, 11, 12, 13, 14.
ப. தி. சுப்பையா பிள்ளையவர்கள் 12.
சு. இராமசாமிக் கோனரவர்கள் 13, 14, 15, 16, 17.
நீதிபதி மா. அனந்தநராயணன் அவர்கள் 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25.
சி. ச. அருணசலம் பிள்ளையவர்கள் 14, 15, 16, 17, 18, 19.
அரி. அ. சு. ஆறுமுகசாமி நாடாரவர்கள் 14, 15.
தி. மு. நெல்லையப்ப பிள்ளையவர்கள் 14, 18, 19.
தி. சு. சீனிவாசராவ் அவர்கள் 14.
பு. ஆவுடையப்பப் பிள்ளையவர்கள் 15.
இசைமணி கா. சங்கரன் பிள்ளையவர்கள் 15, 16, 17.
சங்கரலிங்க கவிராயரவர்கள் 16, 17,
அ. ஆ. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25.
மேடைதளவாய் குமாரசாமி முதலியாரவர்கள் 18, 19, 20, 21, 22.
தமிழ்ப் பெரும்புலவர் ஆ. அருளப்பன் 18, 19, 20, 21, 22, 23, 24, 25.
கி. பெ. சி. வ. பிரகாச நாடாரவர்கள் 18, 19,
டாக்டர் தி. இரா. அண்ணமலைப் பிள்ளையவர்கள் 19, 20, 21, 22, 23, 24.
சொக்க. அமுதகணேச முதலியாரவர்கள் 20, 21, 22, 23, 24, 25.
சு. வெங்கடேசுவரன் அவர்கள் 20, 21, 22, 23, 24, 25,
இ. அ. சிதம்பரம் பிள்ளையவர்கள் 22, 24, 25.
டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் 23, 24, 25.

16. பட்டம் பெற்ஹோர்

நமது சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்

பட்டங்களைச் செப்புப் பட்டயங்களுடன் பல பெரியாருக்கு வழங்கி வருகிறது:

பட்டம் பெற்ற பெரியார்களும் பெற்ற பட்டங்களும் பெற்ற நாளும் பின்வருமாறு:

1. தி. இலட்சுமண பிள்ளையவர்கள்
 –இசைத் தமிழ்ச் செல்வர், 11-6-1934,
 இசைக் கவியரசு, 17-5-1946.

2. வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள்
 –தமிழ்ப் பெருங்கவி, முதுபெரும் புலவர்,
 19-12-1940.

3. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்
 -பல்கலைப் புலவர், 19-12-1940.

4. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள்
 -முதுபெரும் புலவர், 19-12-1940.

5. பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்
 -நாவலர், 19-12-1940.

6. கோவை க. சுப்பிரமணிய முதலியாரவர்கள்
 -சிவக் கவிமணி, 19-12-1940.

7. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள்
 -தமிழ்க் கவிமணி, 19-12-1940.

8. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள்
 -சித்தாந்தப் பேராசிரியர், 19-12-1940.

9. சுந்தரமூர்த்தி ஓதுவாரவர்கள்
 –தமிழிசை மணி, 19-12-1940.

10. அரசர் சர். மு. அண்ணமலைச் செட்டியாரவர்கள்
 -பல்கலை வள்ளல், 4-10-1941.

11. கோவை ம. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள்
 -செந்தமிழ்ப் புரவலர், 14-2-1943.

12. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள்
 -சித்தாந்தப் பேராசிரியர், 17-5-1946.
 சித்தாந்த முதுபெரும் புலவர், 22-7-1952.

13. கா. சங்கரன் பிள்ளையவர்கள்
 –தமிழிசை மணி, 17-5-1946.

14. கீவளூர் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்
 -இசைத் தமிழ்ச் செல்வர், 17-5-1946.

15. அமைச்சர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்
 –தமிழ்ப்பெரும் புலவர், 17-5-1946.

16. பெருநாவலர் பு. சி. புன்னைவனநாதமுதலியாரவர்கள்–தமிழ்ப் பெரும்புலவர், 17-3-1950.

17. ஆ. அருளப்பனவர்கள்,
 –தமிழ்ப்பெரும் புலவர், 4-2-1959

17. சங்க ஆண்டுப் பொதுக்கூட்டங்கள் நடந்த காலம்

[ஒவ்வோராண்டிலும் தணிக்கையான கணக்கும், ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பும் அச்சிட்டு உறுப்பினருக்கு அனுப்பப்பெற்றுத் தடையில்லாமல் ஆண்டுப் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றமை காண்க]

[15–9–1940 பொதுக் கூட்டம் தொழிற்கழக நிறைவெண் ஐந்தாக இருந்ததை மூன்றுக்கியது. 1–8–'54ல் இருபதாவது ஆண்டில் சங்க ஆண்டு திருவள்ளுவராண்டாக்கப் பெற்றுத் தையில் தொடங்குவதாயிற்று.]

11-6-1934	தொடக்கம்	
4-8-1935	முதலாண்டு நிறைவு	
20-3-1936	சங்க ஆண்டு ஆவணியில்	
27-9-1936	இரண்டாவது ஆண்டு நிறைவு	
2-10-1937	மூன்றுவது	,,
10-9-1938	நான்காவது	,,
27-8-1939	ஐந்தாவது	,
15-9-1940	ஆறுவது	,,
14-9-1941	ஏழாவது	ஆண்டு நிறைவு
4-10-1942	எட்டாவது	,,
28-8-1943	ஒன்பதாவது	,,
27-8-1944	பத்தாவது	,
20-9-1945	பதினொன்றுவது	,,
31-8-1946	பன்னிரண்டாவது	,,
7-9-1947	பதின்மூன்றுவது	,,
2-9-1948	பதினான்காவது	,,
11-11-1949	பதினைந்தாவது	,,
24-9-1950	பதினாறுவது	,,
30-9-1951	பதினேழாவது	,
19-9-1952	பதினெட்டாவது	,,
19-10-1953	பத்தொன்பதாவது	,,
1-8-1954ல்	ஆண்டு தையில் தொடங்குவதென்பது தீர்மானிக்கப்பெற்றது	
30-1-1955	இருபதாவது	ஆண்டு நிறைவு
20-2-1956	இருபத்தொன்றுவது	,,
30-1-1957	இருபத்திரண்டாவது	,,
9-2-1958	இருபத்துமூன்றுவது	,,
8-3-1959	இருபத்துநான்காவது	,,
23-1-1960	இருபத்தைந்தாவது	,,

18. கலைச் சொல்லாக்கக் கழகம் — சென்னை-1936

கழகம் 1. பூதநூல், இயைபு நூல், கணித நூல்

1. சாமி விபுலானந்தரவர்கள், B. Sc. (இயைபு நூற்றலைவர்).
2. ச. இராசகோபாலாச்சாரியாரவர்கள், பி. ஏ., பி. எல். (பூதநூல்—துணைத்தலைவர்),
3. கீ. சி. இராமசாமி ஐயரவர்கள், எம். ஏ., எல். டி. (கணிதநூல்—துணைத்தலைவர்).
4. R. வைத்தியநாதசாமி அவர்கள், M. A., D. Sc.,
5. R. V. சாத்திரியவர்கள்.
6. K. C. வீரராகவ ஐயரவர்கள், எம். ஏ., எல். டி.
7. R. வைத்தியநாதனவர்கள், பி. ஏ., எல். டி.
8. K. S. கணபதிப் பிள்ளையவர்கள், எம். ஏ.
9. அ. சீனிவாசராகவனவர்கள் எம். ஏ.
10. K. சீனிவாசராகவனவர்கள், எம். ஏ., எல். டி.
11. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்.
12. சாமி வேலாயுதம் பிள்ளையவர்கள், பி. ஏ., எல். டி.

கழகம் 2. உடல் நூல், நலவழி, இயற்கை நூல்

1. M. S. சபேச ஐயரவர்கள், எம். ஏ. (மரநூல்-துணைத்தலைவர்)
2. S. G. மணவாளராமானுசமவர்கள் எம். ஏ., Ph. D., (உடல்நூல், உயிர் நூல்—துணைத் தலைவர்)
3. க. ப. சந்தோசமவர்கள், பி. ஏ., எல் டி.
4. A. இராமநாத பிள்ளையவர்கள், எம். ஏ., எல். டி.
5. M. N. ஏகாம்பரநாத ஐயரவர்கள், எம். ஏ., எல். டி.
6. R. விசுவநாத ஐயரவர்கள்.
7. குணம்மாள் சனர்த்தனம் அவர்கள், எம். ஏ., எல். டி.
8. G. தேவநேயப்பாவாணரவர்கள்.
9. K. இராமலிங்கமவர்கள், பி. ஏ.
10. V. P. கமலநாதனவர்கள்.
11. துடிசைக்கிழார் அ. சிதம்பரனாரவர்கள்.
12. சாமி வேலாயுதம் பிள்ளையவர்கள், பி. ஏ., எல். டி.

கழகம் 3. வரலாறு, அரசியல் முதலியன

1. T. S. நடராச பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்., (துணைத்தலைவர்)
2. அ. முத்தைய பிள்ளையவர்கள், எம். ஏ.
3. T. செங்கல்வராய பிள்ளையவர்கள், பி. ஏ., எல். டி.
4. S. வையாபுரிப் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.
5. R. P. சேதுப்பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.
6. ஆ. அருள் தங்கையா அவர்கள்.
7. M. S. பூரணலிங்கம் பிள்ளையவர்கள், பி.ஏ., எல். டி.
8. A. K. பரந்தாம முதலியாரவர்கள்.
9. C. கண்ணுச்சாமி பிள்ளையவர்கள், பி. ஏ.
10. மீனும்பாள் சிவராசவர்கள்.

கழகம் 4. தரை நூல்

1. N. சுப்பிரமணிய ஐயரவர்கள், எம். ஏ., எல். டி.
2. K. M. சுப்பிரமணிய ஐயரவர்கள், எம். ஏ., எல், டி.
3. K. சீனிவாசராகவனவர்கள், எம். ஏ,, எல்.டி.
4. மணி கோடீசுவரனவர்கள், பி. ஏ., எல். டி.
5. இ. மு. சுப்பிரமணியபிள்ளையவர்கள்.
6. கீ. சி. இராமசாமி ஐயரவர்கள், எம். ஏ., எல். டி.

(பின் வருவோர் தரை நூற் சங்கத்தாற் சேர்க்கப்பெற்ருேர்)

7. இராவ்பகதூர் R. கிருட்டினராவ் பான்சிலேயவர்கள்
8. S. பாலகிருட்டின ஐயரவர்கள், எம். ஏ., எல். டி.
9. K. C. வீரராகவ ஐயரவர்கள், எம். ஏ., எல். டி.
10. S. முத்துக்கிருட்டின ஐயரவர்கள், எம். ஏ., எல். டி.
11. திருநாராயணன் அவர்கள், எம். ஏ.
12. Miss A. தேவதாசனவர்கள்.
13. K. கலியாணசுந்தரமவர்கள்.
14. K. சுந்தரேச ஐயரவர்கள்.
15. கிருட்டினவேணி அம்மாளவர்கள்,
16. இலட்சுமிநரசிம்மம் அவர்கள்.
17. M. S. சபேச ஐயரவர்கள், எம். ஏ.
18. S. S. கிருட்டினசாமியவர்கள்.

கழகம் 5. உளநூல், ஒளிப்படம், இசை

(பின்னுல் அமைக்கப்பெற்றது)

1. S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், எம். ஏ.
2. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள், பி. ஏ.
3. அ. சீனிவாசராகவனவர்கள், எம், ஏ.
4. சீனிவாச ஐயங்காரவர்கள், எம். ஏ.
5. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்.

19. ஆட்சிச் சொல்லாக்கக் கழகம், நெல்லை

1. T. கோமதிநாயகம் பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல்., முன்னை நீதிபதி (தலைவர்)
2. M. A. குற்ருலலிங்கம் பிள்ளையவர்கள், பி. ஏ., முன்னைச் சென்னை அரசுச் செயலாளர்.
3. டாக்டர் D. R. அண்ணுமலைப் பிள்ளையவர்கள், மருத்துவக் கலைஞர்.
4. N. P. சுந்தரம் பிள்ளையவர்கள், பி. ஏ., முன்னைச் சீரியற் பொறிஞர்.
5. V. கிருட்டினசாமி ஐயர், பி. ஏ., முன்னை மாவட்டப் பத்திரப் பதிவாளர்.
6. U. விருத்தாசலம் பிள்ளையவர்கள், முன்னைக் கான்காப்பாளர்.
7. T. S. நமசிவாயம் பிள்ளையவர்கள், முன்னை மாவட்ட அஞ்சல் தலைவர்.
8. J. சக்கரபாணி நம்பியாரவர்கள், எம். ஏ., பி. எல்., வழக்கறிஞர்.
9. சு. இராமசாமிக் கோனுரவர்கள், பி. ஏ., பி. எல்., வழக்கறிஞர்.
10. K. கணபதி ஐயர் அவர்கள், பி. ஏ., முன்னை வேளாண்மைக்கல்லூரி இயைபியல்வல்லார்.
11. S. N. பாண்டிப்பெருமாள் பிள்ளையவர்கள், முன்னைக் காவல்துறையினர்.
12. K. வேங்கடசுப்பிரமணிய ஐயரவர்கள், எம். ஏ., எல். டி., மாவட்டக் கல்வி அதிகாரி.
13. ம. இரா. சண்முகசுந்தரம் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்., உதவி ஆணையர், அறநிலையத் துறை.
14. கி. பட்சிராச ஐயங்காரவர்கள், பி. ஏ., பி. எல்., வழக்கறிஞர்.
15. ஆ. அருளப்பனவர்கள், பி. ஏ., சேவியர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர்.
16. டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், தலைவர், தமிழ்நாடு சித்தவைத்திய சங்கம்.

20. ஆட்சிச் சொல்லாக்கக் கழகம், சென்னை

1. S. வேங்கடேசுவரன் அவர்கள், I. C. S., வருவாய்த்துறைத் தலைவர், (தலைவர்)

2. நீதிபதி மா. அனந்தநாராயணன் அவர்கள், I. C. S.,

3. M. S. குற்றாலலிங்கம் பிள்ளையவர்கள், பி. ஏ., முன்னை அரசுச் செயலாளர்.

4. T. K. சங்கரவடிவேலுப் பிள்ளையவர்கள், பி. ஏ., I. A. S., அரசுச் செயலாளர்.

5. R. V. கிருட்டின ஐயரவர்கள், பி. ஏ., எம். எல்., முன்னைச் சட்டசபைச் செயலாளர்.

6. கோதண்டபாணி பிள்ளையவர்கள், பி. ஏ., துணை ஆட்சித் தலைவர்.

7. பேராசிரியர் அ. முத்தையா அவர்கள், எம். ஏ., பொருளாதாரத் துணைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி.

8. சொக்க. அமுதகணேச முதலியாரவர்கள், பி. ஏ., செஞ்சிலுவைச் சங்கச் செயலர்.

9. டாக்டர் இரா. பி. சேதுப் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்., தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்.

10. டாக்டர் சா. கோ. மணவாளராமாநுசம் அவர்கள், எம். ஏ., முன் துணைவேந்தர்.

11. டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், தலைவர், தமிழ்நாடு சித்தவைத்திய சங்கம்.

12. பேராசிரியர் ஆ. அருளப்பன் அவர்கள் பி. ஏ., சேவியர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர்.

13. விநாயகம் அவர்கள், சென்னை அரசுத் தலைமை மொழிபெயர்ப்பாளர்.

21. ஆசிரியர் கல்லூரிக் கலைச்சொல்லாக்கக் கழகம்

தலைவர் :

திரு. நெ. து. சுந்தரவடிவேலு,
மாநிலக் கல்வி இயக்குநர், சென்னை.

துணைத்தலைவர் :

திரு. மு. இராம. பெருமாள் முதலியார்,
முதல்வர், ஆசிரியர் கல்லூரி, சைதை.

அமைச்சர் :

திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை

உறுப்பினர் :

1. திரு. S. பழநிச்சாமி
2. ,, S. V. சிட்டிபாபு
3. ,, ச. ஆறுமுக முதலியார்
4. ,, கே. ஆர். அப்புள்ளாச்சாரி
5. ,, இராமாநுசம்
6. ,, V. S. இராமாநுசம்
7. ,, என். கிருட்டினசாமி ஐயர்
8. ,, எ. இ. சுப்பிரமணியம்
9. ,, க. கோவிந்தராசன்
10. ,, ஆர். திருஞான சம்பந்தம்
11. ,, பி. தங்கவேலு
12. திரு. ந. பார்த்தசாரதி
13. ,, வி. கிருட்டின மூர்த்தி
14. ,, என். வேதமணி மனுவேல்
15. ,, பிரெடரிக் ஆப்பர்
16. ,, சு. சம்பத்து
17. ,, கே. எம். கே. காதர்
18. ,, S. வாசுதேவன்
19. ,, க. வைத்தியநாதன்
20. ,, கே. ஏ. இராமநாதன்
21. ,, வி. ஆனந்தராசர்
22. ,, இ. கே. வரதன்
23. குமாரி ஆர். இந்திராதேவி
24. ,, லீலா ஆபிரகாம்
25. ,, பி. அகல்யாபாய்
26. ,, இராசரத்தினம்மாள்
27. திரு. ஞானப்பிரகாசம்
28. ,, நெ. சு. தையல்பாகம்
29. ,, சி. சீனிவாசன்
30. ,, S. கிருட்டினசாமி ஐயர்
31. ,, அ. பன்னீர்செல்வம்
32. ,, P, S. டேவிட் சோசப்
33. ,, சொக்க. அமுதகணேச முதலியார்